


சிவநெறித் திருவிளக்கு

# அமரர். பசுபதி துரைரத்தினம்

அவர்களின் 31ஆம் நாள் நினைவாக மலரும்

# இரத்தின சிலாசாசனம்

03.10.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# 31 ஆம் நாள் நினைவுகளுடன்.



அன்னையின் மடியில்
30.01.1963

ஆண்டவன் அடியில்
03.09.2022

யாழ் / நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும், மல்லாவி மற்றும் வவுனியா பெரியதம்பனையை வசிப்பிடமாக கொண்ட

அமரர்

# திரு.பசுபதி துரைரத்தினம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## திதி நிர்ணய வெண்பா

**ஆண்டு சுபகிருது ஆகிய நல் ஆவணியில்**
**சேரும் பூர்வ ஷப்தமியில் பார்போற்றும்**
**பசுவூர்சீராளன் பசுபதி துரைரத்தினம்**
**பதமடைந்தார் காண் ஆலவனன் தாள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



*யாழ். நெடுந்தீவு கிழக்கு, 15ஆம் வட்டாரம், சேந்தறையைப்*
*பிறப்பிடமாகவும் வவுனியா - பெரியதம்பனையை*
*வாழ்விடமாகவும் இருமரபுந்தூய தனிநாயகம் இராமநாதர்*
*மாமுதலிமாரின் வழித்தோன்றலும், அமரர்களான பசுபதி*
*புஸ்பவதி தம்பதியரின் செல்வப் புதல்வருமான*

எமது குடும்ப விளக்கு

# அமரர் பசுபதி துரைரத்தினம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த
31ஆம் நாள் நினைவாக மலரும்

# இரத்தின சிலாசாசனம்

## 03.10.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பின் உறைவிடமாய்
விடாமுயற்சியின் எடுத்துக்காட்டாய்
அறிவாற்றல், ஆளுமைகள் நிறைந்த
சகலகலாவல்லவராய்,
பண்பின் இலக்கணமாய்த் திகழ்ந்து
எங்கள் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்
மெழுகுவர்த்தியாய் தன்னையே
உருக்கி ஒளியூட்டிய
எங்கள் அன்புத்தெய்வத்தின்
நீங்கா நினைவுகளோடு
இந்நினைவேட்டை
எமது கண்ணீர்ப் பூக்களாய்
அவர் தம் பாதக் கமலத்திற்கு
காணிக்கையாக்குகிறோம்

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

– இங்ஙனம் –

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

கரும்பும் இளநீரும் காரெள்ளும் தேனும்
விரும்பும் அவல் பலவும் மேன்மேல் - அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்கு காப்பு

## தேவாரம்

பாலனாம் விருத்தனாம் பசுபதி தானாம் பண்டுவெங்
கூற்றுதைத் தடியவர்க் கருளுங்
காலனாம் எனதுரை தனதுரை யாகக் கனலெரி
யங்கையில் ஏந்திய கடவுள்
நீலமா மலர்ச்சுனை வண்டுபண் செய்ய நீர்மலரக்
குவளைகள் தாதுவிண் டோங்கும்
ஏலம்நா றும்பொழில் இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப் பேணியென் எழில்கொள் வதியல்பே

## திருவாசகம்

சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்தன் வேள்வியினில்
இந்திரனைத் தோள்நெரித்திட் டெச்சன் தலையரிந்து
அந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல்தகர்த்துச்
சிந்தித் திசைதிசையே தேவர்களை ஓட்டுகந்து செந்தார்ப்
பொழில்புடைசூழ் தென்னன்பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்காண் அம்மானாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

பெருமையிற் சிறுமை பெண்ணொடுஆ ணாய்என்
பிறப்புஇறப்பு அறுத்தபே ரொளியே!
கருமையின் வெளியே கயற்கணாள் இமவான்
மகள்உ மை யவள்களை கண்ணே!
அருமையின் மறைநான் கோலமிட் டாற்றும்
அப்பனே அம்பலத்து அமுதே
ஒருமையிற் பலபுக்கு உருவிநின் றாயைத்
தொண்டனேன் உரைக்குமாறு உரையே

## திருப்பல்லாண்டு

நிட்டையி லாவுடல் நீத்தென்னை
ஆண்ட நிகரிலா வண்ணங்கள்
சிட்டன் சிவனடி யாரைச் சீராட்டும்
திறங்களுமே சிந்தித்(து)
அட்ட மூர்த்திக்கென் அகம்நெக ஊறும்
அமிர்தினுக்(கு) ஆலநீழற்
பட்டனுக்(கு) என்னைத்தன் பாற்படுத்
தானுக்கு பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

அருட்பெருகு தனிக்கடலும் உலகுக்கெல்
லாம்அன்புசெறி டகலுமாம் எனவும் ஓங்கும்
பொருட்சமய முதற் சைவநெறி தான்பெற்ற
புண்ணியக் கண்ணிரண்டெனவும் புவனம்உய்ய
இருட்கடுவுண்டவரருளும் அகிலம் எல்லாம்
ஈன்றாள்தன் திருவருளும் எனவுங்கூடித்
தெருட்கலை ஞானக்கன்றும் அரசுஞ்சென்று
செஞ்சடை வானவர்கோயில் சேர்ந்தார் அன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

அவனிதனி லேபி றந்து மதலையென வேத வழ்ந்து
அழகுபெற வேந டந்து இளைஞோனாய்
அருமழலை யேமி குந்து குதலைமொழி யேயு கன்று
அதிவிதம தாய்வ ளர்ந்து பதினாறாய்

சிவகலைக ளாக மங்கள் மிகவுமறை யோது மன்பர்
திருவடிக ளேநி னைந்து துதியாமல்
தெரிவையர்க ளாசை மிஞ்சி வெகுகவலை யாயு ழன்று
திரியுமடி யேனை யுன்ற னடிசேராய்

மவுனவுப தேச சம்பு மதியறுகு வேணி தும்பை
பணிமுடியின் மீத ணிந்த மகதேவர்
மனமகிழ வேய ணைந்து ஒருபுறம் தாக வந்த
மலைமகள்கு மார துங்க வடிவேலா

மவனி வர வேலயுகந்து மயிலின்மிசையே திகழ்ந்து
படியதிரவே நடந்த கழல்வீரா
பரமபதமே செறிந்த முருகனென வேயுகந்து
பழனிமலை மேலமர்ந்த பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடுந்தீவு ஆலமாவனப் பிள்ளையார் மீது பராவல்

பழமைமிகு நெடுந்தீவு கிழக்கில் ஆர்வமுடன்
பக்தருக்கு அருள்தரவே கோவில்கொண்டு
நல்ல தமிழ்ப் பாடல்கள் நாதமாக - பெரும்
அங்குசத்தை ஏந்திநிற்கும் அருளொளியே
வெகுதூரம் உன்கோவில் இருந்தபோதும்
உயிர் ஓயாமல் உன்னடிக்கே ஓடிவந்து
தொழு தெழுவான் தூயநெஞ்சான் உன்னுரிமைக்காரன்
பழுதிலாது இருத்தி நின்னடியில் - நிதம்
பாசத்துடன் காத்திடுவாய் கருணையாளா!

## மல்லாவி ஸ்ரீ பாலசுப்பிரமணியர் மீது பராவல்

பலபல வேடமாகும் பரமன்தன் புத்ரா
மயிலேறுமெங்கள் வேலா - யாழ்
வடக்கேயிருந்து வந்து திருநகர் அமர்ந்திருந்து
'திரு'வுடன் (அன்ன)தானம்தரு கந்தா - எம் தந்தை
முருகா முருகாவென உருகாத நாளில்லை
உமக்காய் முதலாவது பூசை எடுத்தே மகிழ்ந்து
நிலையாத வாழ்வின் பலமாய சுகங்கள் களைந்து
உனைத்தேடி வந்தார் இனிதாயரவணைப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியதம்பனை ஸ்ரீ நாகபூசணி அம்பாளிடம் அருள் வேண்டிப் பாடிய அருட்பா

இயற்கை எழில் கொஞ்சும்
வனப்புடை ஊராம் பெரியதம்பனையில்
கல்வியும் செல்வமும் நிறைமாந்தரும்
வாழும் சூழலின் மத்தியில் அமர்ந்து
நல்லருள் பொழியும் ஸ்ரீ நாகபூசணி அம்மையே
பாம்பது தலைமேல் படமெடுத்தாட
உடுக்கையும் வாளும் இருகரத்தேந்தி – உனை
நாடும் பக்தரைத் தயவுடன்
அணைத்தே அருளும் தாயே
பூமாலை கரத்தேந்திப் பாமாலை பாடியும்
உற்சவத்தில் ஊஞ்சலிட்டு ஆடீரூஞ்சல் என
நெஞ்சுருகிப் பாடித் துதிசெய்த நின் பக்தனாம்
பசுபதி துரைரத்தினத் தானும் தன்
மண்ணுலக வாழ்வினிப் போதுமென்றும்
விண்ணுலக வாழ்வே வேண்டுமென்றும்
எண்ணியுமை வந்தடைந்தார் தாயே
கண்ணிமைபோல் காத்துநாளும் - நின்
காலடியில் வைத்தருளவேண்டுமென
நெஞ்சுருகி வேண்டி நிதம்
பஞ்சபுராண மதுபாடிப் பாடி
சிரம் தாழ்த்திகரம் கூப்பி
வேண்டுகிறோம் அம்மா
இவனை ஏற்று - நீ
திருஅருள் புரிவாய் தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்
# பசுபதி துரைரத்தினம்
## அவர்களின்
## பசுமையான வாழ்க்கைப் பதிவிலிருந்து...

இந்துமா சமுத்திரத்தின் நித்திலமாய் இலங்கி ஒளிவீசி நிற்கும் இலங்கைத்தீவில் சீரான புகழ் மங்கா சிவபூமியாம் யாழருகே இயற்கை அன்னை இனிதாய் விதைத்த சப்பதீவில் கடல் அணங்காள் மடிதனில் பெரும் குழந்தையாக அலைகளிடை தவழ்ந்து நிற்கும் பசுமைத்தீவாம். சேர, சோழ பாண்டியர் மட்டுமன்றி பல்லவரோடு அந்நியரையும் கவர்ந்திழுத்து மருதமொடு நெய்தல் முல்லை நிலங்கள் சூழ நிலையான பொன் பொருளை ஆளும் தீவு. சைவமும், தமிழும் மிளிர்ந்தோங்க பரிகளோடு பால்சுரக்கும் ஆவினமும் உலவிவர அனுமனவன் மூலிகைகள் ஏந்திக் காத்து அதனோடிணைந்த நவ தானியங்கள் விளைவாய்த் தந்து மாமேதைகள், வள்ளல்களை உலகுக்கீந்து அமைதியாக வீற்றிருக்கும் நெடுந்தீவு தன்னில் ஆதவன் மகிழ்வாக எழும் திசைக்கண் சீரும், சிறப்பும், செல்வ வளமும் கொண்ட புகழாளன் தனுக்கோடியெனும் 'பெரிய வெள்ளையரின்' பூட்டனாக சீர்கொண்ட இருமரபும் தூய தனிநாயகம் இராமநாதர் மாமுதலிகளின் வழித்தோன்றல்களான இராமநாதர் சின்னம்மா மற்றும் வேலர் நாகம்மாவிற்கு பேரனாக பசுபதியோடு புஸ்பவதி என்பார்க்கு ஆறாவது மகவாக அமரர் பசுபதி துரைரத்தினம் வந்துதித்தார் 1963ல் (30.01.1963).

சீரும் சிறப்புமான இவர் வாழ்வை மெருகூட்ட தூக்கி வளர்த்தெடுத்து சீராட்டி அன்புசெய்த சகோதரியான அமரர் மங்களேஸ்வரி (முன்னாள் கிராமசேவையாளர்), மனம் முழுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகவாய் ஏற்று இறுதிவரை ஏந்தி காத்த கோமளம் (பவளம்), பாசமான அண்ணன் "டெல்" என்று பெயர் பெற்ற கதிரேசன் (ஓய்வுநிலை கிராம சேவையாளர்), சிறுபராயமுதல் இவரோடு இணைபிரியாதுயிராய் இருந்துவரும் இளைய அண்ணன் கிருஸ்ணபிள்ளை (பிற்), இவரது மூத்த சகோதரங்களாகி அன்பு செய்ய இவரும் விறுவிறென நடந்து சுறுசுறுப்பாகி 'செல்லத்தம்பி' யாகி சிங்கார குழப்படிகளோடு வண்ணமயமான நினைவுகள் பதித்து வாழ்ந்திருந்தார் வையம் தன்னில். பின் தனக்கு விளையாட பத்மதேவியென (ஆசிரியர்) ஒரு தங்கை கிடைத்தபோது தனக்கு மட்டுமே அவள் என்று போகுமிடமெல்லாம் பொக்கிசமாய் அணைத்துச் சென்றார். அதன் பின் எப்போதும் அவர் சிறு பிள்ளைகள் போல் அன்பு செய்யும் தம்பி இரவீந்திரநாதனுடன் (அதிபர்) கிரிஜகலாவையும் (பிரதிப்பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்) சக உதிரமாக பெற்று அவர்க்கு பாசமுடை 'சின்னண்ணா'வாக மாறி நேசமுடைய எண்முத்து களிலொன்றாய் வாழ்ந்தார்.

ஏரோட்டிப் பசியோட்டும் இனிய சைவவேளாண்குலமதனில் அவதரித்த பெற்றோர்கள் விவசாயத்தை விஸ்தரிக்க என மேழிக்கு உறைவிடமாய் மேன்மையுடைய பூமி 'வன்னி'யை வந்தடைய இச்சின்னத்தம்பியும் அவர்களுடன் வீறுநடை போட்டு வந்தான். ஏற்கனவே தன் ஆரம்பக் கல்வியை யா/நெடுந்தீவு இராமநாதன் வித்தியாலயத்தில் (நெடுந்தோம்பு) ஆரம்பித்திருந்த இவர் பின் மு/யோகபுரம் மகாவித்தியாலயத்தில் தொடரலானார்.

விவசாயியின் வித்தான இவர் சிறுவயதிலேயே தந்தைக்கும் இணைபிரியா தமையனுக்கும் தரமான வரமானார். உழைக்கும் திறன் கொண்டு படிப்புடன் வேலைகளில் ஈடுபட்டார். காடாய் இருந்த நிலம் நாடாக்க 'ஐயா'விற்கு ஆறுதற்கரமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலம் மூத்த சகோதரிகளின் திருமணம் கைகூட நாகநாதி கனகரத்தினம், நாகமுத்து வேலாயுதம் எனும் 'அத்தார்' மாரை உறவாகக் கொண்டு மகிழ்ந்திருந்தார். துரையண்ணை என அன்பாக மல்லாவி மக்களால் அழைக்கப்பட்ட இவருக்கு 1985ஆம் ஆண்டிலிருந்து ஒரு கடை நடாத்தும் வாய்ப்புக் கிட்டியது. இடரான இக்காலம் பல இடர்களுக்கு மத்தியில் பல மைல்கள் சென்று பொருட்கொள்வனவு செய்து வந்து இலாப நோக்கமற்று விற்பதில் திருப்திகொண்டார். பின் அரச சேவைகளுக்காக வாய்ப்பு கிடைத்தபோதும்

ஆழி மண்ணின் மேழி மகனான இவரை **"பூமி திருத்தியுண்"** என்ற ஔவையின் வரிகள் அழைக்கலாயிற்று. இவரது கடின உழைப்பும் விடாமுயற்சி பண்பும் 1989ஆம் ஆண்டிலிருந்து முற்றாக விவசாயி ஆக்கின. நெற்செய்கையிலும் உப உணவுப் பயிர்ச் செய்கையிலும் முழு ஈடுபாட்டுடன் களம் கண்டார். இக்காலப் பகுதியில் தனது சகோதரர்களின் திருமணபந்தத்தால் குமாரவேலு பத்மகுமாரி (ஓய்வுநிலை ஆசிரியை) நடராசா கமலராணி (ஓய்வு நிலை அதிபர்) ஆகியோரை 'அண்ணி' எனும் உறவாகப் பெற்றார். தன்னைவிட தங்கையின் வாழ்வை முன்னிலைப்படுத்தி அவருக்கு செல்லையா பாலசுப்பிரமணியம் என்பாரை மணமுடித்து நின்றார்.

இயல்பாக அன்பு, பண்பு, அமைதி என்பன அணிகலமாக கொண்டு புன்முறுவலுடன் அளவாக பேசும் இவர் தனக்குகந்த துணையாக நாகமுத்து வள்ளியம்மை (பூமணி) இணையரின் கடைசி மகளும் தனைப்போன்றே குணமுடைய அதிர்ந்தே பேசத் தெரியாத நல்லாளான ஆசிரியை டயோசினி (யோகா) அவர்களை 11.12.2000 அன்று கைப்பிடித்தார். இதனால் புவனேஸ்வரி (அமரர்), வனிதரத்தினம், தியாகவதி (ஓய்வு நிலை அதிபர்), கருணாராணி, கருணாம்பிகை (கனடா), தர்மநாயகி (நோர்வே) ஆகியோரை மைத்துனிகளாகவும் தில்லையம்பலம் (அமரர்), தம்பிஐயா (ப.நோ. கூ.சங்கம்) ஆகியோரை மைத்துனர்களாகவும் முத்துக்குமாரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(காணி அபிவிருத்தி உத்தியோகத்தர்), கனகரத்தினம் (ப.நோ.கூ.ச.), நாகலிங்கம் (அமரர் - கிளிநொச்சி வைத்தியசாலை) கலாநாயகி, மங்களராணி, தேவரத்தினம், ஜயம்பிள்ளை, தேவராசா (நோர்வே) ஆகியோரை சகலர் வழி உறவுகளாகவும் பெற்று இன்புற்றிருந்தார்.

1970 களில் இருந்து 30 வருடங்களாக மல்லாவிப் பதியை வரித்துக்கொண்டவர் திருமண பந்தத்தில் இணைந்தபின் வவுனியா மாவட்டத்தின் இயற்கைத் தன்மை குன்றாத பச்சைப் பசேலென்ற வயல்களும் அமைதியான குளங்களில் ஆடித்தவழ்ந்து, தலையாட்டும் கதிர்களில் அலசிக்குளிர்ந்துவரும் இதமான காற்றை அள்ளித்தரும் சுத்தமான பூமியாம் பெரியதம்பனை எனுமிடத்தை வாழ்விடமாக கொண்டார். அங்கு இணைபிரியா கலை பிணையாய் வாழ்கையில்

**“மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்**
**நன்கலம் நன்மக்கட்பேறு”**

எனும் நல்வாக்கிற்கேற்ப தம் சொத்தாக இரு முத்தை பெற்று அவர்க்கு அட்ஷயா, அபினயா என நாமமிட்டு கண்ணின் இரு மணிகளாய் காத்து வளர்த்தார். அவர்களின் பள்ளிப்பருவத்தில் சிறிது காலம் வ/பெரியதம்பனை மகா வித்தியாலயத்திலும் பின் வவுனியா நகரின் பிரபல பாடசாலையான வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்திலும் மாணவர்களாக்கினார். அவர்கள் தம் பெரியன்னையின் பாதுகாப்பிலும் அரவணைப்பிலும் கல்வியில் வல்லுனர்கள் ஆதல்கண்டு ஆறுதல் கொண்டார். இவரோடும் இவர் மக்களோடும் மட்டிலா பாசம் கொண்ட இவரது மாமியாரும் இவர்களின் கல்வி முன்னேற்றத்தில் முழுமூச்சாய் இருக்க ஏனைய உறவுகளும் அரவணைத்து நிற்க ஆறுதல் கொண்டோ என்னவோ அவர்களின் மாணவப் பருவம் முடியுமுன்னே தன் வாழ்வை முடித்துவிட்டார்.

நுண்ணறிவும் பொறுமையும் தனித்துவமும் கொண்ட இவர் இயந்திர சாதனங்களையும் புதிய தொழினுட்பங்களையும் விவசாயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுத்தும் வல்லுனரானார். ரூ - போட்டியர் என்று அன்பாக அழைக்கப்பட்டார்.

எந்தவொரு வேலையையும் பண்ணாக செய்வதனால் 'பணிக்கத்தார்' என்றும் செல்லமாக அழைக்கப்பட்டார். தெளிந்த சிந்தனையும் வலிந்துதவும் மனமும் கொண்ட இவர் விவசாயத்தில் மட்டுமன்றி சமய சமூக பணிகளிலும் முன்னணிச் செயற்பாட்டாளர் ஆனார். பெரிய தம்பனை கமக்கார அமைப்பில் இருந்து தலைமை யேற்று வழிநடாத்தினார். பெரியதம்பனை வரசித்தி விநாயகர் கோவில் மற்றும் பெரியதம்பனை ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தி லும் நிர்வாகத்தில் இணைந்து இறைபணியாற்றினார். அத்துடன் பெரியதம்பனை கிராம அபிவிருத்தி சங்கத்தில் உறுப்பினராக இருந்தது மட்டுமின்றி கிராமத்தில் பல வேலைகளையும் செய்து வழங்கினார். உதாரணமாக புளியடி முறிப்பு குளத்தையும் அதனோடிணைந்த கட்டுமானத்தையும் மிகவும் சிறப்பாக செய்து வழங்கியிருந்தார். குறைந்த ஆனால் சிறந்த சொல்லாடல்களால் நன்மதிப்புப் பெற்றார். தேவையான போது பிழைகளை சுட்டிக்காட்டவும் தயங்கவில்லை.

இவ்வாறு வாழ்ந்தபோது தன் ஒரே அன்புத் தம்பிக்கு கோபால் ஆகவனீயம் என்பவரையும் (ஆசிரியை) கடைக்குட்டி சகோதரிக்கு சிவசம்பு சிவானந்தன் (பொறியியலாளர்) என்பவ ரையும் வாழ்க்கைத் துணையாக்கி மகிழ்ந்திருந்தார்.

பின் போரெனும் அரக்கனின் கோர நாக்கினில் அகப்பட்டு இடம் இடமாய் இடம்பெயர்ந்து முள்ளிவாய்க்கால்வரை சென்றார். வாழ்வா? சாவா? என்ற நிலையிலும் பலருக்கு தன் செலவிலேயே தன் 'டிராக்டர்' மூலம் பொருட்கள் ஏற்றி இறக்குவது போன்ற பல உதவிகள் செய்தார். தன் உறவுகள் யாவரும் உள்வந்தபின்பே இறுதியாளாய் இராமநாதன் முகாம் வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் சகோதர சகோதரிகளின் படிப்பு, திருமணம் மற்றும் முன்னேற்றங்களில் உதவிப் பூரித்து நின்றபோதும் சந்தித்த ஏற்ற இறக்கங்கள் வாழ்க்கை ஒரு ரோஜாப் படுக்கையல்ல என்பதை சொல்லிற்று. 2001இல் தன்னினிய தந்தையை இழந்து பின் 2012இல் மூத்த சகோதரியாம் மாணிக்கமக்காவையும் எதிர்பாரா திழந்து நின்றார். அறுசுவையளித்த அன்னையவள் 2020இல் இறையடி சேர துடிதுடித்தார். மேலும் பல அருமைச்சொந்தங் களுடன் மனைவி வழி கிடைத்த மச்சான், மாமா, மச்சாள் என இழந்த சோகங்களை மனக்கிடக்கையில் பூட்டி வைத்தார். இவை யெல்லாம் சேர்ந்து **'நோய்க்கு இடம்கொடேல்'** என்றிருந்த இவருடம்பில் நீரிழிவு, இரத்த அமுத்தம் இன்னும் சிறு நோய்களும் புகுந்திடக் காரணமாயிற்று.

இருப்பினும் மண்ணைப் பொன்னாக்கும் வித்தகனாமிவன் **'ஊக்கமது கைவிடேல்'** என உழைத்ததுடன் கடைசிவரை **'ஈவது விலக்கேல்'** என வாழ்ந்தார். பத்தி கூட்டத்தின் பண்பாட்டை கைவிடாது செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருந்தார். சொந்தபந்தங்களை மதிப்பளித்து ஆதரித்து மகிழ்ந்திருந்தவேளை அங்கொன்றுமிங்கொன்றுமாக வந்துபோன வருத்தங்கள் ஒன்றிணைந்து இவரை சில கிழமை இறுகக்கட்டிற்று. தம்பனைக்கு போகவேணும் வயல்வெளியில் உலாவவேணு மென்ற ஆசைகள் மேவ எந்த மருந்தானாலும் ஏற்றுத் தவமிருந்தார். சிறுவயது மகள்களுடன் மருமக்கள் பெறாமக்களென சிறுசுகள் ஒன்றிணைந்து தம் உயிரை ஒறுத்து சேவைகள் செய்தல் கண்டு சந்தோசக் கவலை கொண்டார். உள்நாட்டு வெளிநாட்டு இருவழிச் சொந்தங்களும் சொட்டும் தளராது மனபலமும் பணபலமும் கொடுத்து இறையருளும் வேண்டி நின்றார். வைத்தியர் குழாமும் வடிவாக கவனித்து ஒருவழியாய் தேறிவிட்டார் இனிப்பயமில்லை யென்று சொல்லிவிட மீண்டெம்முடன் உலாவரும் நாட்கள் வெகுதூரத்திலில்லை என்றிருந்தோம். ஆனால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"இறைவன் நல்லோரிடத்தில் காட்டும் இரக்கம்**
**உறக்கத்தால் மீளா உறக்கம்"**

என்பதாய் 03.09.2022 அன்று விடிகாலையில் எல்லோரையும் ஓரிரு மணித்துளிகள் உறங்கவைத்த ஆலமாவன அண்ணல் தன்னோடு இன்புற்றிருக்கவென இவரைமட்டும் அழைக்க

**"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லைஎனும்**
**பெருமை யுடைத்து இவ்வுலகு"**

என்றுணர்ந்த இவரும் இவ்வுலக வாழ்வைவிட்டு மெய்யுலக வாழ்வையேற்று பிள்ளையாரின் பாதாரவிந்தங்களை சரணடைந்தார்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப உள்ளம் ஆறி இவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப் போமாக,

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னாரின் இளமை பருவத்தின் போது







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் தெய்வமே...

அம்மி மிதித்து அருந்ததி பார்த்து
அந்தணரோடு அவையோர் சாட்சியாக
மங்கல நாண் பூட்டி மனையாளாய் வாழ்வில்
மங்கலமாய் ஏற்றநாள் முதல் என்னை
கண்ணை இமை காப்பதுபோல் காத்துவந்த தெய்வமே

என்னையும் இரு செல்வங்களையும்
இடை நடுவே விட்டுவிட்டு எங்கே சென்றீர்கள்
உங்கள் பிள்ளைகளைப் பற்றிய கனவுகளோடு
ஒவ்வொரு நிமிடத்தையும் களித்தீர்கள்
கனவுகள் நனவாகமுன் எங்கே சென்றீர்கள் என் தெய்வமே

உங்கள் வரவைப் பார்த்து மனையும் கிராமமும்
வெறிச்சோடிக் கிடக்குதப்பா
நெல்லும் தானியங்களும் வீடு நிரம்பி வழியும்
"அணில் குரங்கிற்கும் உணவு வேணும் தானே" என்பீர்கள்
இனி யார் இடுவார் இனி விளைச்சலில்லை என்பேனோ
அப்பா

சுற்றத்தாருடன் கூடி உணவருந்தி மகிழ வைப்பீர்
இனி என்று காண்போம் அந்த உறவின் மாட்சிமைகளை
நோயுற்ற வேளையிலும் சிறிதும் மனம்
தளராது எமையும் தளரவிடாது
"எனக்கொரு வருத்தமும் இல்லை" என்பீர்களே அப்பா
இனி என்று கேட்போம் உம் கரும்புக் குரலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புயலடித்தாலும் ஓயாது எமக்காய் உழைத்த உம் கைகள்
வயல்வரப்புக்கள் எங்கும் ஓடி உரமேற்றிப் பயிர் வளர்த்த
உம் கால்கள்
ஒப்பற்ற பாசம் நிறைந்து பொங்கிய உம் சத்திய நெஞ்சம்
என்று வாழ்ந்த நீர் இன்று எவ்வாறு நிரந்தரமாய் ஓய்வெடுத்தீர்
நினைக்கவே நெஞ்சு வெடிக்கிறது.
உம் நிஜத்தில் வாழ்ந்த நாம் உம் நினைவின் நிழலில்
வாழ எண்ணினீரோ அப்பா...

வார்த்தைகள் என்னிடம் இல்லை வாய்திறந்து சொல்வதற்கு
உமை இழந்து தவிக்கின்றேன் பேசாமல் போனதேனோ
என் தெய்வமே...
உம் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டி நிற்கின்றேன்

**மனைவி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் அருமை அப்பாவே...

அன்பான தந்தையாய் நல்லதோர் ஆசானாய்
உற்றதொரு தோழனாயிருந்து - பாசமாய்
எமை வளர்த்த பொன்னான அப்பாவே
கள்ளம் கபடமற்ற கார்மேகர் எங்கள் அப்பா

எத்தனை ஜென்மங்கள் தவமிருந்தோமோ
உங்களைத் தந்தையாய் பெறுவதற்கு
என்றும் எம் கதாநாயகராய் மிளிர்பவரே
உங்களை தந்தையாய் பெற்றதிலே - என்றும்
எமக்கோர் கர்வம் அப்பா

கல்வியிலும் சேவையிலும் - நாங்கள்
கலங்கரை விளக்காக வேண்டுமென்று - மிகக்
களிப்புடன் தானிருந்தீர்களே அப்பா - நீங்கள்
கண்ட கனவுகள் நனவாகிப் போகு முன்பே
எமைப்பிரிந்து சென்றதேனோ

ஒருசொல்கூட கடிந்துபேசியதில்லை
குறும்புகள் நாம் செய்யும் போது
"எல்லாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றேன்" என்ற
ஒரு வார்த்தை அதற்குள் ஓராயிரம் அர்த்தங்கள்

உங்களுடன் வயலில் சுற்றித்திரிந்த
காலங்கள் என்றும் மறக்காதப்பா
இனி தம்பனையும் மருதங்குழியும் - என்று
காணும் உங்களின் கால்த் தடத்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவுடன் செல்வதென்றால் எமக்கு – நல்ல
விருப்பம் என்று எங்கு சென்றாலும்
எமையும் அழைத்து செல்வீரே - இன்று கண்தூங்கும்
நேரத்திலே தவியாய் தவிக்கவிட்டு நிரந்தரமாய்
சென்றதேனோ

Two Fourtyயில் அப்பா வருவார் என
சிறுவயது முதல் வீதியில் காத்தநாட்கள்
இன்னமும் மறையவில்லை
உங்களுடன் பழங்கதை பேசிச் சிரித்த
காலங்கள் கண்முன்னே வந்து போகுதப்பா

என் சகோதரர்களின் பிள்ளைகள் - எல்லாம்
என் பிள்ளை என்பீர்கள்
அதன் பொருள் நாம் அறிந்தோம்
நீங்கள் நோயுற்ற வேளைதனில் ...

வாழ்நாள் முழுவதும் எமக்காய் வாழ்ந்தீர்கள் அப்பா
உங்கள் போல் அப்பா நிலைத்திருக்க எங்களுக்கு ஏனோ
கொடுத்து வைக்கவில்லை – கையில் கிடைத்த
பொக்கிஷத்தை தவறவிட்டு தவிக்கின்றோம் எம் அருமை
அப்பாவே

மன்னியுங்கள் அப்பா காலனவனோடு
போட்ட பந்தயத்தில் தோற்றுவிட்டோம்
இக்கோலம் பூணுவீர்கள் என்று கனவிலும்
நினைக்கவில்லையே எம் அருமை அப்பாவே
நேரமிருந்தால் மீண்டும் வந்துவிடும் எம் நிலத்திற்கு...

இறைவனவன் திருவடியில் உம்பாதம் பதிந்திட
இறைவனிடம் இறைஞ்சுகின்றோமப்பா

**பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமியார் புலம்பல்

சிறு பாலகனைப் போல் வலம் வந்து என்னை
அம்மம்மா என்றழைத்து பல் பொழுதும்
பணிவிடைகள் பலசெய்து என் உள்ளத்தில்
உயர்ந்த இடத்தில் நீ இருந்தாய்
கள்ளமில்லா நல்ல உள்ளம் கொண்ட
தெள்ளரிய வள்ளலே தேன் கனியே
உள்ளம் வெதும்பி நான் வேதனையில் வாடுகிறேன்
மனைசிறக்க வாழ்வாயென
மனக்கோட்டை கட்டி வைத்தேன்
கோட்டை சரிந்து கொடும் பள்ளமானதையா
வசந்தமான உன்வாழ்க்கை என்றும்
வாசனை வீசும் என்று நான் காத்திருக்க
வாசம் இழந்து வானுயரச் சென்றதேனோ
வாடித்துடிக்கின்றேன் வந்த உன் பிரிவால்
என் சொல்லி ஆறுவேனோ இறைவா நீ
என்றென்றும் துணை இருப்பாய்
தும்பிக்கையானே துணையாய் இருந்தென்றும்
துன்பம் களைந்தென்றும் இன்புற்று வாழ்வாயென
நம்பிக்கையோடு நாளும் வேண்டுகின்றேன்.

**அன்பு மாமியார்**
**பூமணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரனே உன் நினைவில் சிறு கிறுக்கல்கள்...

பசுஞ்சோலை விரும்புகின்ற பச்சைக்கிளி
விடிகாலை விழித்தெழுந்து
விரைவாக வயல் சேரும்
உண்ணவல்ல உழைப்பதற்கு

யாரெழாவிட்டாலும் தானெழுந்து
மின்கையெழுத்து வைக்க ஓடும் ஊழியர்போல்
ஊண் உறக்கம் பாராது சலித்திடாது
தப்பாது சென்றுவிடும் தரையிறங்கும்
பாசமிகு வரப்பு மண்ணில்
எப்போதும் தப்பாது இது நடக்கும்.

முதல்நாளே திட்டமிட்டு மனதில் வைத்து
மறுநாளில் அது முடித்து இன்னும் போகும்
பணம் காசு சேர்ப்பதற்காய் பறக்கவில்லை
தினம் வயலில் புதுமைசெய்ய இந்த ஓட்டம்
அது வளர்ந்து வருகின்ற அழகைக்கண்டு
ரீரிறிற்றோல் றிற்றோல் என்று விசில் வேறு...

தன் கூடு விட்டு வேறிடம் போக நேரமேது
பின் நம்பிய பயிர்களுக்கு தோழன் யாரு
அம்மாவின் நினைப்பு வந்து முட்டும் போதும்
சகோதரங்கள் தன்னை நினைக்கும் போதும்
உணர்வுகளை திடமாய் அடக்கியாண்டு
ஒருபொழுது ஒதுக்கி ஓடிவர
ஓர் அரையாண்டு தன்னும் பிடித்துவிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் அருகுக்கு வந்துவிட்டால்
அட அணைவாக படுத்திருந்தே கதைகள்பேசி
கன்றைக் கண்டதாயின் அகமகழ்வில்
சும்மா கொண்டாட்டம் கொண்டாட்டம் கொண்டாட்டமே...

சோதரங்கள் சேர்ந்துவிட்டால் சிரிப்பொலிகள்
சோராமல் நடு இரவுவரை பழங்கதைகள்
ஒன்றா இரண்டா எட்டொலிகள் இதில் இன்று
இரண்டுபோனதால் வழிகிறதே கண்துளிகள்

பாயோ கடகமோ காண்ட்பாக்கோ (hand bag)
பின்னல் கதிரையோ அல்ல கலைவண்ணமோ
எந்தவொரு பொருளையும் பார்த்தவுடன்
அதுபோல இன்னொன்றை ஆக்கிடும் உயர்ந்ததிறன்
அவற்றின் கொள்ளை அழகினை என்ன சொல்ல...

மனையியல் மாணவிகள் பாடநேரம் வகுப்பில்
செய்த பண்டங்கள் பரிமாறல்கண்டு
இடைவேளையில் வேலியால் ஓடிவந்த குழு
இங்கு எம் வீட்டில் அதனைச் செய்து
இறுகி வர முன்பு மணியடிக்க எமக்கும்
பரிமாறி தாமும் உண்டு ஓட்டம் பிடிப்பதை மறக்கலாமோ...

ஒட்டித்திரியும் தமையனுடன்
சிறுசிட்டாக பறந்தங்கே சுதந்திரமாய்
முள்ளு மரத்திலேறிக் காய் பறித்து
பின் முற்றத்தில் அதனை மறைத்துவிட்டு
முள்ளு மரத்திலும் ஏறுவானோ மனிதன்
என்று தில்லாக கேட்ட காலம் போச்சே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்ன வயசாய் இருந்த போதும்
செல்லமாய் இங்கே வளர்ந்த போதும்
சிந்தையில் தோன்றும் எண்ணங்களோ
பென்னம் பெரிதாக சிறகடிக்கும்
பெரும் பொறுப்புகள் சீராய் முடிந்தேறும்
திண்ணிய உடற்கட்டுக்கு குறைச்சலில்லை
தீண்டாது நோய்கள் ஒரு போதும்
அண்ணனவனுடன் கயிறிழுத்தாலும்
வெற்றியென்னவோ தம்பி... காலடியில்

போர்க்காலம் சூழ்ந்த மேகங்கள் - யாரையும்
பார்க்காது பெய்யும் குண்டுமழை
வீரம் செறிந்த உள்ளமிது வீழமாட்டேன்
என எண்ணி நிற்கும்
ஷெல் வந்து வீழினும் உற்றார் கேட்டால்
ஓடிடும் 'டிராக்ரர்'இல் சேவைசெய்ய
பின் ஒருநாளில் குண்டுவீழ்ந்து
உற்ற உறவினன் சிதறிவிட
மீதியாய் இருந்த அவன் கதைத்தபடி
கண்கள் துஞ்சிட கண்டுவிட்டு......
நெஞ்சமடைத்திடத் தான் மயங்கி
எழுந்த பின் எங்கும் செல்வதில்லை.
கோழியை கொன்றாலும் பாவம் என்று
கொள்கையுடைய கருணையுள்ளம்
கண்முன் வீழ்ந்த உயிர் கண்டபின்பு
கவலையில் நனையாதோ என்ன இது...
பின் ஆழியின் அலைகளில் நீந்திப் பாய்ந்து
அங்குள்ள குளிகளில் வீழ்ந்து முங்கி
சிவந்த குண்டுச் சிதறல்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்காது ஓடிட மனம் வந்திடுமோ.......
அதிசயம் ஏதும் நடந்துவிட்டால்
போகலாம் என்று அமர்ந்த அண்ணன்
இறை ஆசியால் வந்தனன் கப்பலேறி
இதை என்றும் மறந்திடக் கூடிடுமோ

தனக்கென தேடாத கொடையாளன்
நல்ல எண்ணங்களால் பெரும் செல்வந்தன்
இணையினை 'நீ' என்றிடா மேன்மையாளன்
துன்பங்கள் தாங்கிடும் பெரும் பூலோகன்
இகத்திலே வாழ்கின்ற எம்மை என்றும்
தன் சிரசாலே சுமந்திட்ட மெய்ச்சகோதரன்
உனக்கு (அந்திம) கவிதை எழுதவா நாம் பிறந்தோம்
கல்வெட்டு (சிலாசாசனம்) பதிக்கவா வாழ்ந்திருந்தோம்
எமை அன்பினால் ஆண்ட தேவனே
என்றும் எம் சிந்தைக்குள் வாழும் ஜீவனே
உனை தீயிலிட்டெல்லோ நாம் வெந்தோம்

ஜென்மம் நிறைந்தது சென்று நீ வாழ்க
நிம்மதி நிம்மதி நிம்மதி நினை சூழ்க

**என்றும் உன் நினைவுகளுடன்**
**அன்புச் சகோதரிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதரன் இரங்கல் உரை

செந்தமிழும் சைவநெறியும் சீர்மிகு தொன்மைச்சிறப்பும் நிறைந்து விளங்கும் பசுந்தீவினில் புறநானூறு கூறும் வீரமறவர்கள் தோன்றிய தொன்மைச் சிறப்புமிக்க "தொட்டாரம்" என்ற கிராமத்தில் உயர் சைவவேளாளர் தனிநாயகமுதலியார் மரபில் புகழ் பூத்த பசுபதி புஸ்பவதி தம்பதிகளின் புதல்வனான செல்லமாக அழைக்கும் செல்லத்தம்பியாகிய அமரர் துரைரத்தினம் மண்ணில் பிறந்தார்.

இவ்வுலக வாழ்க்கையில் பிறந்தார் இறந்தார் என்றில்லாது செயற்கரிய பணிகளைச் சமூகத்திற்கு அர்ப்பணித்தார்.

**"தானமும் தவமும் தான் செய்தல் அரிது"** என்ற சிறப்புக ளுடன் வாழ்ந்தார். உச்சரிப்பில் நேர்த்தி, கதையில் தெளிவு, மிகுந்த பொறுமை, அளவற்ற பாசம், அழகான உடன்பிறப்பு நீங்கள் உங்களை போன்ற ஓர் உறவு மீண்டும் நினைத்தாலும் வரப்போவதில்லை. அன்பு, பாசம், பண்பு, கடமை, கண்ணியம் என்பதை வாழ்ந்து காட்டியவர். காலங்கள் மாறும், கோலங்கள் மாறும் பாசத்திற்கு வேஷமில்லை. நாம் செல்லமாகவும், செல்வமாகவும் செல்லத்தம்பி என்றழைக்க எமக்கு யார்? இன்று நீ இல்லை எம்மிடம் அதைத் தாங்கும் வலிமையும் எம்மிடம் இல்லை.

வள்ளுவர் மரணத்தைபற்றி கூறும் போது,

**"குடம்பைதனித் தொழியப் புள் பறந்தற்றே**
**உம்போர் உயிரிடை நட்பு"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது பிறக்கும் போது இறக்கின்ற நாளும் குறிக்கப்பட்டு விடுகின்றது என்கிறார்.

**“எப்போது நடக்கும் என்று யாருக்கும் தெரியாது**
**எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்**
**ஒரு பொல்லாப்பும் இல்லை**
**முழுவதும் உண்மை” என்கிறார் - யோகர் சுவாமிகள்**

மேற்கூறப்பட்ட விடயங்களுக்கு இலக்கணமாகிவிட்டார் எனது உடன் பிறப்பு. எனது தம்பியின் மனைவி பிள்ளைகளுக்கும் குடும்பத்திற்கும் எப்படி ஆறுதல் சொல்வதென்றே தெரியாது நொருங்கிப் போய் இருக்கிறேன். மீண்டும் வருவாயா எம்பதிக்கு பாசத்தம்பியாய்.

இவரது ஆத்மாசாந்தி அடைய எல்லாம் வல்ல நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார் அருள் பாலிப்பாராக என வேண்டி நிற்கின்றேன்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**உமது நினைவுகளைச் சுமந்துநிற்கும்**
**அண்ணா**
**P.கதிரேசன் (டெல்)**
**நெடுந்தீவு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லமே நீ சென்றதெங்கே...

செல்லத்தம்பி நீ சென்றதெங்கே துரையே!
சொல்லொணா சோகத்துள் எமைவிட்டு
மெல்ல நீ மறைந்தாயோ மேலுலகிற்கே – எல்லாம்
வல்ல இறைவன் தான் வாவென்று அழைத்தானோ.

பெற்றமக்களும் பெறாமக்களும் பரிதவிக்க
ஒற்றையாய் நீ ஓடிமறைந்ததேனோ சொல்
உற்றாரும் உறவுகளும் உளம் குமுற
சுற்றமெலாம் இங்கிருக்க சுவர்க்கம் தான் ஏகினையோ.

பின்னே வந்தவன் நீ பெரும்பேறு பெற்றவன் நீ
முன்னே வந்த என்னிடம் முழுதாய் கடமைபெற்று
சின்னவனே சென்றாயே சிவனிடமே
அன்னை தந்தை வழிதேடி அவசரமாய் சென்றனையோ எமைவிட்டு

துரையே இரத்தினமே துவழ வைத்தாயே எமையே
உரைக்க முடியவில்லை உணர்வுகள் தான் உறங்கவில்லை
இரையானாய் அந்த இயமனின் வலையினிற்கே
கரைகின்றது எம் கண்களில் நீர்
கடவுளிடம் உனக்கெனவே இறைஞ்சுகின்றோம் உன்
ஆத்மாசாந்திக்காய்...

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**உன் அன்புச் சகோதரன்**
**பிற்று அண்ணா**
**இணுவில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர வேண்டும் சின்னண்ணா மீண்டும் நீங்கள்

எழுத எழுத நினைக்கும் போது ஏனோ முடியாமல் போகின்றது. எதைத்தான் எழுதுவது, எத்தனைதான் எழுதுவது, இதுவரை எம்மோடு இருந்தவர் இப்போதும் இருக்கிறாரா இல்லையா எனக்கூட புரிந்துகொள்ள சஞ்சலமாகவுள்ளது. ஒவ்வொரு நிகழ்விலும் எம்முடன்... இனி எப்போது வருவாய்

வாழ்வின் தொடக்கத்திலும் விளங்கவில்லை முடிவிலும் விளங்கவில்லை. இடையில் தெரிந்திருந்துதான் என்ன பயன் எனத் தோன்றுகிறது.

**"நெருநல் உளனொருவன் இன்று இல்லை என்னும்
பெருமை யுடைத்து இவ்வுலகு."**

நேற்று ஒருவன் இருந்தான் இன்று அவன் இறந்து போனான் என்று சொல்லும் நிலமையே இவ்வுலகும் உடையது இதிலிருந்து

கலக்கமும் சஞ்சலமும் நீங்க வள்ளுவம் தான் நாம் வாழும் வரை துணை என்று புரிகிறது.

**"புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பிலும்
துச்சில் இருந்த உயிர்க்கு"**

உடம்பிற்குள் ஒதுங்கிக் கிடந்த உயிருக்கு எப்போதும் தங்கியிருப்பதற்கு உரிய இடம் அமையவில்லைப் போலும் என்கின்றது வள்ளுவம். எனவே உயிர்(ஆன்மா) வேறிடம், சேர்ந்தாக வேண்டும் என்பதே புரிகிறது.

மனிதப் பிறவியில் நீங்கள் எம்முடன் இருந்ததுபோல் மறுபிறவியில் எம்முடன் இருக்கவேண்டும் என்று ஆசை சின்னண்ணா. இதை வரமாகக் கேட்கிறோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்துவிட்டீர்கள். நீங்கள் தெய்வத் தடிக்கு சென்று சாவையும் வென்றுவிட்டீர்கள். வீடு பேறாகி இருக்க பிரார்த்திக்கின்றேன். இறையாக இருந்து எம்மை, வழி நடத்திச் செல்லுங்கள்.

உங்கள் புன்னகையையும் கதைசொல்ல பொக்கென்று சிரிப்பதை யும் மறக்கமுடியவில்லை. தன்நலன் பாராது பிறர் நலம் நோக்கி வாழ்ந்திருந்தீர்கள். நிச்சயமாக உங்கள் குழந்தைகள் சிறப்புறுவர். உங்கள் உயிரை காப்பாற்ற இயன்றவரை முயற்சித்து வெற்றியென நினைத்து மகிழ முடியாமற் போய்விட்டது. எங்களின் களைத்துப் போன நெஞ்சத்தை நிறைக்க வரவேண்டும் சின்னண்ணா நீங்கள் மீண்டும்.

**தம்பி அப்பன்.**
**(ப.ரவீந்திரநாதன்)**
**அதிபர், கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனைவியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனதருமை மைத்துனரே !

தங்கையவள் கைபிடித்த சீர்நிறைந்த மைத்துனரே
அன்னவளும் பிள்ளைகளும் கதறியழ
பார்த்திருக்க எம்மால் முடியவில்லை
ஊர் மக்கள் எல்லோரும் உம் தலைமை ஏற்று நின்றார்
வஞ்சகம் கபடமில்லை நெஞ்சினில் களங்கமில்லை
நின் போல் மனிதரில்லை நினைக்க
மனம் வெடிக்கிறது மைத்துனரே
பிஞ்சில் பறந்து சென்றீரே பிள்ளைகளை தவிக்கவிட்டு
சினம் காணா கொடையாளி எனதருமை மைத்துனரே
தற்துணிச்சல் உத்வேகம் உமது பாணி மைத்துனரே
மதிநுட்ப விவசாய மன்னன் என்பார் ஊரினிலே
எம் தாயையும் உம்தாய் போல் நேசித்த குணசீல
மைத்துனரே
மருமகனின் இழப்பையிட்டு மைந்தன் இழந்தது போல்
ஏங்கித் தவிக்கிறார் எம் தாயும்
உமது செந்நெல் வயல் நிலங்கள் எல்லாம் விழிசொரிந்து
கிடக்கின்றன உம் வரவை நோக்கி
ஆலமரம் போல் கிளைத்து வந்த உமது வாழ்வை
ஆணிவேரில் கறையான் அரித்தது போல் உமது உடலை
சாய்த்திடவே சென்றதெங்கே...
உமது சுற்றத்தார் நாம் எல்லோரும் ஆற இடமின்றி
அலைந்து திரிகின்றோம்
நீர்க்குமிழி வாழ்க்கையடா எனதருமை மைத்துனரே.
அன்னாரின் இழப்பு எமது குடும்பம் சார்ந்த எல்லோருக்கும்
பேரிழப்பாகும். அவரின் ஆத்மா சாந்தியடைய எமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலதெய்வம் கமலாலயம் பதிமுருகன் அருள்பாலிப்பார். அத்தோடு அன்னாரின் பிரிவால் துயர் உற்றிருக்கும் தங்கை, பிள்ளைகள், அவரின் சகோதர சகோதரிகள் மற்றும் உற்றார் உறவினர்கள் மனம் சாந்தியடைய வேண்டியும் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**ஓம் சாந்தி... ஓம் சாந்தி... ஓம் சாந்தி...!**

**பிரிவால் துயரமுற்றிருக்கும்**
**மைத்துனர்**
**நா.தம்பிஐயா (சின்னமணி)**
**ஓய்வுபெற்ற கிளை முகாமையாளர்**
**செட்டிகுளம் ப.நோ.கூ.சங்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியவில்லை மைத்துனரே

"வையகத்துள் வாழ்வாங்கு வாழ்பவண் - வானுரையம்
தெய்வத்துள் வைக்கப்படும்"

அக்காவின் பிரிவுத் துயரில்
தவண்டிருந்த வேளையிலே
மைத்துனர் மறைந்த துயர்
மனதை வாட்டுதையா.

செய்வதறியாது நெங்சடைத்து
நிலைதடுமாறி நிற்கின்றோம் மைத்துனரே.
தங்கையும் குழந்தைகளும்
தேம்பி அழுகின்றார்கள்
தேற்ற முடியாமல் தவிர்க்கின்றோம் மைத்துனரே.
அப்பாவை காப்பாற்ற தங்கையும், இரு பிள்ளைகளும்
சகோதரர்களும் பெறாமக்களும், மருமக்களும் ஊண்
உறக்கமின்றி
தங்கள் கல்வியையும் பொருட்படுத்தாது அல்லும் பகலும்
அரும் பாடு பட்டனரே
இரக்கமற்ற காலனவன் ஏன் தான் உமை எடுத்தான்
அவனிதனில் வாழ்ந்த வேளையிலே
அன்பே உருவாய் வலம் வந்த மைத்துனரே
எம் எல்லோருக்கும் உற்ற துணையாய் இருந்து
கடமை கண்ணியம் காருண்யம் ஆகியவற்றை
தமது இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த மைத்துனரே
உமது இல்லத்தில் (பெரியதம்பனை) இனி எப்போ
ஒன்று கூடி நாம் களித்திருப்போம் மைத்துனரே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மோடு நெடுநாள் வாழுவீர்கள் என
நாம் நினைத்திருக்க எம்மை விட்டு ஏன்
சென்றீர்கள் மைத்துனரே
பிறப்பும் இறப்பும் உலக நியதி யென
எம் நினைவைத் தேற்றிக் கொண்டு
உலக நாயகனை உளமார வேண்டி
உமதடியில் உவப்புடனே வைத்து
நற்க அருள் வேண்டுமென்று மனதார
வேண்டுகின்றோம்.

ஆண்டுபல சென்றாலும் ஆறாத உம் துயர்

**ஓம் சாந்தி... ஓம் சாந்தி... ஓம் சாந்தி...!!!!**

**பிரிவால் துயருற்றிருக்கும்**
**மைத்துனிகள்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது அன்புத் தம்பியே

எனது துணைவியை இழந்து தவித்து நிற்கும் வேளையிலே எனது அன்பிற்கும் பாசத்திற்கும் நன்மதிப்பிற்கும் உரித்தான உடன்பிறப்பு சின்னத்தம்பியின் செய்திகேட்டு இக்கணமும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்றேன். கண்ணீர் விடாதநாட்கள் இல்லை. மடக்கொடி அற்ற மனை, உடன்பிறப்பில்லா உடலை சுமந்து திரிகின்றேன்.

துரைரத்தினமே எங்கள் குடும்பத்தின் கடைசித் தங்கைக்கு வந்த துணை நீர். உமது புவனேஸ் அக்கா (எனது மனைவி) தொடக்கம் தங்கச்சி வரையுள்ள சகல குடும்ப உறுப்பினர்களுடனும் முகம் கோணாமல் அன்பாக இருந்தவர் எனது தம்பி சின்னத்தம்பி. இவ்வாறு குடும்ப வாழ்விலும் சிறந்த பாசத்திலும் விளங்கியவர். பொதுப்பணியிலும் இணைந்து, பெரியதம்பனை கமக்கார அமைப்பு தலைவராக இருந்து, பல வருடங்கள் ஆற்றிய சேவை அளப்பரியது. எல்லோராலும் போற்றப்பட்டது பாராட்டுக்குரியது. உள்ளத்தால் பொய்யாதொழுகி உற்றார் உறவினர் நண்பர்கள் எல்லோர் உள்ளத்துள்ளும் இருக்கின்றார் சின்னத்தம்பி. எனது அன்பு மகளே யோகா, செல்வங்களே அட்ஷயா, அபி கவலைப்பட வேண்டாம் அப்பா எங்களுடன் தான் இருக்கிறார்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**ச.முத்துக்குமாரு**
**(காணி அபிவிருத்தி உத்தியோகத்தர்-கனடா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணா என்றழைக்கும் தம்பியே

அமரர் பசுபதி துரைரத்தினம் அவர்கள் பெரியதம்பனையில் குடியேறிய நாள் முதல் ஒரு சொந்த சகோதரனாகவே இருந்து எம் எல்லோரது இன்பத்திலும் துன்பத்திலும் பங்காற்றினார். எமது சக குடும்பத்தார்களோடு தம்பியாகவும் மாமாவாகவும் தந்தையாகவும் ஏன் ஒரு சிறந்த நண்பனாகவும் ஆலோசனை தரும் ஆசானாகவும் வழிகாட்டியாகவும் செயற்பட்டு வந்தார். இறைபக்தி, எளியவர்க்கு முன்னின்று உதவுதல், கனிவானபேச்சு, சாந்தம், தன்னடக்கம் எனக்கொண்டு வாழ்ந்தமையால் எல்லோர் மனங்களிலும் நீங்கா இடம் பெற்றார். இவ்வாறு எல்லோரிடத்திலும் நல் மதிப்போடு வாழ்ந்தமையால் அவரை மாமனிதர் என மதிப்பிடுவதில் தவறில்லை என்று நான் கருதுகின்றேன்.

நாங்கள் வெளியிடம் செல்லவேண்டி உள்ளமையை அவர்களிடம் கூறியபோது "எனக்கு ஒன்றுமில்லை நான் இந்தியா சென்று வருத்தத்தை மாற்றி நலமாக வருவேன் நீங்கள் யோசிக்காமல் போய் பிள்ளைகளைப் பார்த்துவிட்டு சந்தோசமாக வாருங்கள்" என்று கூறி வழியனுப்பி வைத்தார். அந்த வார்த்தைகள் எனது காதுகளில் ஒலித்துக்கொண்டே இன்றும் இருக்கின்றன. ஏற்பட்ட நோயின் வலிமையால் துடிதுடித்துப் போனவர் வைத்தியர்களின் அயரா முயற்சியாலும் உடன் இருந்து கவனித்து கொண்டவர்களின் விடாமுயற்சியாலும் குணமடைந்து உறவுகளுடன் பேசிமகிழ்ந்து உணவு உண்டு உறங்கிய வேளை கொடிய காலனவன் வஞ்சம் காட்டி மறைத்துவிட்ட செய்திகேட்டு வெந்தணலில் வீழ்ந்த புழுவாய் துடிதுடித்துப் போனோம். எமது அருமைத் தம்பியை என்று தான் காணப்போகிறோம். நானும் எனது மனைவி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள், மருமக்கள், பேரக்குழந்தைகள் எல்லோரும் ஒரு நல்ல உறவை இழந்துவிட்டோம் என அங்கலாய்ந்து அழுவதோடு ஆத்மா சாந்தி வேண்டியும் இறைவனை வேண்டுகின்றோம்.

காலனது கொடும் பிடியில் அகப்பட்டு மீளாத்துயர வெள்ளத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கும் அன்னாரது மனைவி, பிள்ளைகள் இருவர் மற்றும் சகோதர சகோதரிகள் அவர்தம் குடும்பத்தார், பிள்ளைகள் மற்றும் மனைவியின் சகோதரர்கள், சகோதரிகள் குடும்பத்தார் பிள்ளைகள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை இதயபூர்வமாகத் தெரிவித்துக் கொள்வதோடு எம்மை எல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு சென்ற துரைரத்தினம் அவர்களது ஆத்மாசாந்தி அடைந்து இறைவன் திருப்பாதங்களில் சங்கமமாகி இன்புற்றிருக்க வேண்டுமென எல்லாம்வல்ல இறைவனை பக்தியோடு வேண்டி நிற்கின்றோம்.

**ஓம் சாந்தி!!!**

**இ.கனகரத்தினம் குடும்பத்தினர்**
**வாழைத்தோட்டம், பெரியதம்பனை.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்லத்தம்பிச் சித்தப்பா சென்றதெங்கே

**'செல்லத்தம்பிச் சித்தப்பா'** என்று ஆசையுடன் நாம் அழைக்க, வந்திடுவீர்கள் எம்பக்கத்தில் முகத்தில் ஓர் அழகான புன்னகை யுடன். அமைதியான உங்கள் முகத்தினிலே அன்பின் உருவத்தினையே நாம் கண்டிருக்கின்றோம். சித்தப்பா வைத்தியசாலையில் என்றதும் தெய்வங்களை வேண்டி நின்றோம். 'எப்போது வீட்டிற்கு வருவாராம்?' என்றுதான் கேட்டோமே தவிர இப்படி ஒரு முடிவைச் சற்றும் எதிர்பாரத்திருக்கவில்லை நாம், இதை நினைக்க மறுக்கிறது எம் நெஞ்சம். பாதியிலே செல்வதற்கு எப்படித்தான் மனம் வந்தது சித்தப்பா? ஒற்றுமையாக இருந்த எம் குடும்பத்தின் மேல் யார் கண்பட்டதோ தெரியவில்லை. ஊர் பல கூடினாலும் உம் இழப்பை ஈடுசெய்ய முடியாது. நின் நினைவிழந்த வேளையிலும் எம் பெயர் அழைக்க எண்ணியவர். ஒரு வார்த்தைக்குள் அடக்க முடியாத வரி வடிவம் நீங்கள். உம் திருமுகத்தை எமக்கொருக்கால் காட்டமாட்டீர்களா சித்தப்பா, இன்பச் சிரிப்பில் எமை இயங்க வைத்தீர்கள். இப்போது சிரிப்பிழந்து நிற்கின்றோம். நீங்கள் தொலைதூரம் சென்று விட்டீர்கள். வையகம் உள்ளவரை வாழும் உம் நாமம் எம் நாவில்.

இந்த உயர்ந்த எண்ணம் கொண்ட சித்தப்பா மண்ணிலே தன் வாழ்வை இனிதே நிறைத்து தன் நெடுநாள் வாழ்வை பரமனடியிலே பாரங்கொடுத்துவிட்டார். உங்கள் ஆத்மா சிவனடி நிலைக்க இருகரம் கூப்பி வேண்டுகின்றோம், ஆலமாவன ஐங்கரனை.

**பெறாமக்கள்**
**(உங்கள் சகோதரர்களின் பிள்ளைகள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்வாசக்காரன் மாசற்ற மாமன்...

ஆயிரம் அலைக் கரங்கள் அரவணைக்க
அறிந்திடமுடியா மருந்து மரங்கள் நோய்தீர்க்க
மேய்ந்திடும் ஆநிரைகள் நெய்யோடு பால் சொரிய
ஆங்கில அரசர்களும் ஆசைப்பட்டு ஆண்ட
அன்னை மண் பசுந்தீவாம் நெடுந்தீவின்
பஞ்சுமண்ணில் பிஞ்சென பிறந்துதித்த பொற்சேயே...

எதற்கும் துணிந்த துரை
என்றும் பணிவு கொண்ட கலங்கரை
துணிவு மிக்க துணைத்தோழமை – எனும்
பாசமிகு மாமனே மாமகனே – எங்கள்
சின்னண்ணா மாமாவே செல்லத்தம்பி மாமாவே
ஆருயிர் அண்ணை அங்கிளே அருகிலிருந்த நீரெங்கே....
உறவாடித் திரிந்த மூன்றாம் பிறைநிலவே நீர் எங்கே...

பாசம் மிக்க பற்றாளன்
நெற்கற்றைகளை நிறைய வைத்திருந்த சுற்றத்தாளன்
மாடும், மேழியும் - விளை களனிகளும் - என
உழுதுண்டு பழுது தொழாது வாழ்ந்தவன்

பசுந்தீவின் கரைதாண்டிப் படர்ந்த உன்னத உறவுகளில்
துரையே நீரும் ஒருவர்
துணுக்காயில் எம்முறவுகளிற்குத் துணைசேர்த்தீர்,
தம்பனையின் சொந்தமென நீரிருந்து
தன்னலமற்ற தவவாழ்வு வாழ்ந்து வந்தீர்
மானும் தேனும் நிறைந்த வன்னி மண்ணில்
எங்கள் அமைதியான அத்தையுடன் - ஏர்பூட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்பூத்து சிறகடிக்கும்
உன் சிட்டுக் குழந்தைகளோடு
வாழ்ந்த எங்கள் சின்னண்ணா மாமாவே
சில நொடிகளில் இறைவனடி சேர்ந்ததென்ன
செல்லத்தம்பி மாமாவே, கல்லையும்
கரையவைக்கும் உமது இதயம்
புல்லையும் தளையவைக்கும் உமது நடை
நல்லதொரு பிள்ளை நாலுபேர் சொல்லக் கேட்டிருக்கின்றோம்
சோறுதந்த நெல்லெல்லாம் சோகத்தோடு
அழுகிறதே தம் இலைசாய்த்து...
நீறுபூத்த நெருப்பதனில் நீர் நீண்டு படுத்ததென்ன உன்
தலைசாய்த்து....

இரும்பையும் இழுக்கும் இனிய சிரிப்புனது
காந்தமாய் கவர்ந்திருந்த
தம்பனையின் பெரும்பந்தம் நீர்
அன்புமிகு அண்ணை அங்கிளே
வில்லேறிப்பாயும் வீர அம்பு நீர்
வேலைகளை விஞ்சிய வீமதுரோணர் நீர்
அம்புகளுக்கு அஞ்சாத அர்சுனகிருஷ்ணர் நீர்
கண்கள் எல்லாம் கலங்குகிறது – கால் நீட்டி
நீர் இப்படி இழைப்பாறியதில்லையே எப்போதும்...

உன் பாதச்சுவடுகளாம் மகவுமகள்கள் பதைபதைப்பதைப்
பார்த்தும் செய்வதற்கு ஒன்றுமில்லை......
நெஞ்சு நொறுங்கி மானிடம் வெறுத்து
மனமிறுக்கிப்போய் இருக்கிறோம் - மாமாவே
எழுந்து வந்துவிடும்,
அடைமழையிலும் நடுங்காதவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவெயிலுக்கும் அஞ்சாதவன்
மேடுபள்ளங்களிற்கு மிரளாதவன் - மேழிபிடித்து
மாசற்ற வாழ்வு வாழ்ந்த – நெல்தேசத்து
சொந்தக்காரன் ஆம் - அவன்
எமக்கும் பெரும் சொந்தக்காரன்
நற் பெயர்கள் பல நிறைந்த
பிரியமுள்ள மாமன்

தாய் பாடிய தாலாட்டில் தூங்காத நீர்
தானாகவே தூங்கிப்போனதேனோ.....
உம் தாய் தூங்கிவிட்டாள் என்றா...
எப்படியும் எழுந்திடுவாய் என – எத்தனையோ
இதயங்கள் இரவும் பகலும் ....
இன்னுமிருக்கிறோம் நீ வருவாயென்றெண்ணி
நீ இல்லை என்ற உண்மையை விட
இருக்கின்றாய் என்ற பொய்மையை சுமந்து....
நாம் அழுவதில்லை நீ வருவதற்காய் இருப்பாய் என்பதற்காய்.

இழுக்கும் முனைமட்டுமுள்ள இழகிய காந்தம் நீர்
பழகிய நாட்களையெல்லாம் உளிகொண்டு
அழகியதாய் செதுக்கிய சீரிய சிற்பியே
எங்கள் செல்லமான செல்லத்தம்பி மாமாவே

சிறிய நட்சத்திரங்கள் பெரிய சூரியன்
வண்ணமான நிலவு - இதுவானம் கொண்ட அழகு - இது
என்றுமே மாறாத வனப்பு
அப்படித்தானே நீயுமிருந்தாய் - நீர் மட்டுமேன்
நீந்தி நீண்டதூரம் போனாய்....
எள்ளையும் ஏழாகப்பிரிப்பார் - நெல்லையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறாகப்பிரித்து நிறைவிருந்தளித்தவர் நீர்
மண்ணை மரமாக்குவதில் மகத்தானவர் நீர்
ஆர்பாடிய தாலாட்டில் அசையாமல் படுத்திருக்கிறாய் -இந்தக்
கோடை வெயிலிலும் எப்படி நீர் உறைந்து போனாய்
உறைத்துக் கொண்டே இருக்கிறது - இன்னும்
நீர் இல்லை என்று உள்ளே போன செய்தி எமக்கு

தம்பனையின் வண்ணத்தோரணமே
அண்ணை அங்கிளே - கோபுரமே
கும்பமே கும்பத்து குளிர் நீரே
பாலகனாய் நீர் நடந்த பசுந்தீவின் - பிஞ்சுத்
தடங்களெல்லாம் உசிரோடு கிடக்குதையா
ஓடோடிப் போனதென்ன
துணையாக நடந்திருந்த துரை இரத்தினமெனும் மாமனே....

வீறுகொண்ட நடையினன் - நெற்
சோறுதரும் பெருங் களனியன்
சொல்வதற்கு இனிய அழகினன்
சொந்தம் சொரிந்த துரைரத்தினம் - எனும்
தங்கத் தூணெண நின்ற மாமனிவன்

வேலிகளும் வேய்ந்த கூரைகளும் உள்ள வீட்டுமண்
அடிவானம் வரை அடர் அடவி கொண்ட அழகு மண்
வாசலுக்கு வாசல் வயலும் குளமும் கொட்டிக்கிடக்கும்
அந்த வவுனியா மண்
இறகுமயிலும் இசைக்கும் குயிலும் - மானும் தேனும்
மலிந்து கிடக்கும் எம் தம்பனை மண்
இத்தனை சொத்தும் சூழ்ந்து கிடக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னி மண்ணின் வனப்பிடையே - எம்
சுற்றத்திடையே சுறுசுறுப்பாய் வாழ்ந்த
சந்தன நிறச்சொந்தக்காரனே எங்கள்
செல்ல தம்பி மாமாவே

சிறு குறும்பு செய்து சிரிக்கவைத்து
சிறகடிக்கப் பழக்கிய சீனித்துளி கரும்பே
எங்கள் - சின்னண்ணா மாமாவே
பொன்வண்ண முகக்காரனே எம் - அண்ணை
அங்கிளே
காலைச்சூரியன் கதவு திறக்குமுன் கதவு திறந்து
நீர் போனதெங்கே...

உயர் உழவன் - சாமர்த்தியம் மிக்க சாரதி
பிசகிய இயந்திரம் பழுது பார்ப்பான்,
பொருள் சுமந்த பெரு வாணிபன்,
காலத்தையும் காலத்தோடு வாழ்க்கைத் தேர்ச்சியையும்
கசடறக் கற்ற கடமை நிறைந்த
நிறைகுடக்காரன் - பெரும்
நெற் குடக்காரன்
ரூ போட்டி எனப் பெயரெடுத்த - சின்னண்ணண்
சின்னத்தம்பியன் - எமக்கும் நீமாமன்

கூரிய கம்பியால் குத்தியது போன்றிருந்தது
நீர் ஆறிப்போன செய்தி
என்ன நடந்ததோ தெரியவில்லை - இத்தனை
இளமையில் நீர் இளைப்பாறிப் போனமைக்கு
பசுங் களனிகளை விட அழகானவன் நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம் பாதச்சுவடுகளால் வரப்பு அழகாகும்
வயலும் வளம் சேர்க்கும்
எப்படி யாருக்கு பசியாற்றுவதென - எப்பொழுதும்
நடந்தவன் நீர் -
உங்களுக்கு எப்படி இது நடந்தது......

இருள் கெடுத்து பகலாக்கிய விளக்கொன்று
படுத்திருக்கிறது ...
பூச்சொரிந்த பூ மரம் ...
நெல் சொரிந்த நெல்வனம் ...
வரம்புகளெங்கும் நடந்த வீரமனம் ....
பூந்தோரணமே உன்னை வெந்தீயில்
போட்டுவிட்டு விம்மியழுதபடி இருக்கிறோம்
அழுதுகொண்டே சிரிக்க பழக்கியிருக்கிறாய்,
திருநீறணிந்து தேரேறிப் போய்விட்டாய்
உன் மடவாளிற்கும் மகவுமகள்களுக்கும்
மாற்றிச் சொல்லவே முடியவில்லை...
நீ மறைந்ததை..
மானுடம் வெறுத்துப் போயிருக்கிறோம்

வயல்களில் வீசும் தென்றலில்
வீசுகிறது வாசம்
நிச்சயம் அது உன் வாசம் தான்
நாம் ஓடி ஓடி அழைப்பது - உனக்குக்
கேட்கிறதா
திடீரெனக்காண முடியாது - கன பண்டங்களுடன்
வருவான் - பாசத்தோடு பரிமாற முயற்சிப்பான்
நீ அதை எடு நீ இதை உண் ...
பசியாறும் வரை உரைத்தபடியே இருப்பான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபசரிக்கும் ஒப்பற்ற உழவன் இவன்
பணிக்குப் புறப்படுவான்
பம்பரமாய் பகலிரவு பாராது
சுழன்றபடியிருப்பான்
டே வாடா, எட்றா, தூக்கடா
பாசக் கட்டளைகளை பதமாக பலமாகக் கூறுவான்
பணிகள் பவ்வியமாய் முடிந்து போகும் - அந்தப்
பாசத்தில் இவனை அடிச்சுக்க யாரும் இல்லை...

உயர் உறவாக இருந்தாலும் உற்றதோழனின்
சிந்தையப்பா - உமக்கு
எனினும் உன் சட்டங்கள் இலேசானவை
இறுக்கமானவை -
தயங்கி நாம் நின்று விட்டால் பயம் போக்க
அட விட்றா பார்க்கலாம்
என்னடா நீ என்று அடுத்தடுத்து ஆசுவாசப்படுத்திய
படியே இருப்பான் எங்கள்
அற்புத மாமனே
துரை இரத்தினமே எம் மனப்பயம் துரத்திய
மாசற்ற மறவனே
நீங்கள் மறைந்துவிடவில்லை...

கடவுளுக்குச் செய்ததெல்லாம் உனக்கும்
செய்ய வேண்டியிருந்தது - கற்பூரமேற்றி
கதறிப் பாடிக் காத்திருக்கிறோம்
நல்ல உள்ளமொன்று கல்லாகிப்போனது
காலனெனப் பெயரெடுத்த காலம்செய்த கோலத்தால்

ஆடினார்கள், பாடினார்கள்
அடி மேல் அடி அடித்துப் பறை முழங்கினார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ எழுந்து வரவேயில்லை ...
கண்ணீர் நிறைந்தபடியே இருந்ததெமக்கு
நெஞ்சு விக்கியது வாய் கோணலானது எமக்கு
எம் வதனமொன்று அயனமாகிப் போனதனால்...
செந்தணல் துண்டில் கொழுத்தி
கழுவிக் கரைத்து கடலில் எறிந்து - நீ
காணாமல் போனாலும் கோணலாகாது
என்றும் உன் எண்ணம் எம் நெஞ்சுகளில் - மாமா

சப்த ஸ்வரமொன்று நிசப்தமாகிப் போனது
படமாகிப் படத்தின் மாலையாகி மாலையின் பூவாகி
பூவின் மணமாகி போனதெங்கே பொன்வண்டே
எம் அண்ணை அங்கிளே செல்லத்தம்பிமாமாவே
சின்னண்ணா மாமாவே ...

தாமரை மலரும் தம்பனைக்குளமும்
சாமரங்கள் வீசும் ஆல்முதிரை மரங்களும்
வீட்டு வளம் சேர்க்கும் ஆவும் ஆட்டினங்களும்
காட்டிலே வாழ்ந்து கதை கூறும் குயிலும் விலங்கு
இனங்களும் மனங்கவர குவிந்து கிடக்கும்
தேன்சொரியும் வன்னிமண்ணில்
வனிதை விழுதொன்றைக் கரம் பிடித்து ஏர்பூட்டி
வேர்பரப்பி சீர்பூத்து வாழ்ந்திருந்த தங்கத் தோரணமே
சின்னண்ணா மாமாவே எங்கள் செல்லதம்பி மாமாவே
அண்ணை அங்கிளே எங்கள் வண்ண முகக்காரனே

துரையே நிலத்தூறும் நிலாவரையே...
நீலவானின் நிலாவரை நீண்ட நல்விளக்கே
எங்கள் செங்கன்னச் சின்னண்ணாமாமாவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லமாய் கொஞ்சும் செல்லதம்பிமாமாவே
செஞ்சோறே...
செவ்வண்ணத்துப்பூச்சி நிற அண்ணை அங்கிளெனும்
ஆருயிரே ஆறாறிப்போனதென்ன
நாம் அழுவதற்கு அக்கினியில் ஆசனமெடுத்து
நீர் அமர்ந்ததென்ன...

அடிவானம் வரை நீண்டு கிடக்கும் உம்
அகலக்களனிகளில் ஏதோ ஓர் இடத்தில்
நீர் நிற்பதாய் தேடிப்பார்க்கிறோம்
உம் தம்பனை மண்ணில்...

உந்தன் காற்சுவடிரண்டை
காலம் வந்து கவர்ந்து மறைத்ததென்ன
உங்கள் நூற்சுவடொன்றில் நெஞ்சம்
புதைந்து நாங்கள் அழுவதென்ன...

எம்மோடு மண்ணில் துணை இருந்த
துரை இரத்தினம் எனும் மாசற்ற மாண்புமிகு
மாமாவே நீங்கள்
இறை கோலமாய் அவன்
சந்நிதியில் சரண் பெறுவீர்கள் என்று
நெடுந்தீவு ஆலமாவன ஐங்கரன் பாதம் தொட்டு
ஆண்டவனை பிரார்த்திப்போம் உம்
ஆத்மா சாந்தியடைய
எம்மவர்க்கு ஆறுதல் சொல்லி....

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**அன்புடன் மருமக்கள்**
**(உன் சகோதரிகளின் பிள்ளைகள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் பண்பாளனே சித்தப்பா

அன்பான சித்தப்பா அன்ரியுடன் பார்த்தபோது அளவில்லா. ஆனந்தம் அடைந்தோம். அனைவரும் அம்மாவின் கடைசித் தங்கையின் துணையாக வந்த எங்கள் கடைசி சித்தப்பா மிகவும் அன்பும் பண்பும் நிறைந்தவர். அன்பான அழகான குடும்பமாக வளர்பிறை போல் வளர்ந்து வந்து திருவள்ளுவர் வகுத்த இல்லறவியலின் வரம்புக்கட்டுக்கு அமைய அன்பான உள்ளமும் அதையொட்டிய நல்ல செயல்களும், நல்வாழ்வுக்கான முயற்சிகளை மேற்கொள்வோரில் தலையானவராக திகழ்ந்தவர். எம் சுற்றமெல்லாம் சித்தப்பாவின் நற்பண்புகண்டு வியந்தனர்.

**"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"**

என்று வாழ்ந்து மறைந்தோரை நினைவுகூர்தல், வாழ்வாங்கு வாழ்வோரை போற்றுதல், விருந்தோம்பல், சுற்றம் பேணல், ஆகியவற்றை வாழ்நாள் கடமையாக பேணி வந்தவர். பெரிய தம்பனையில் இருந்த 89ஆம் இலக்க வீடு ஒரு களஞ்சிய வீடாகவே காணப்பட்டது. எல்லா வகையான தானியங்களும் நிறைந்து இருந்தது. பறவைகள், பட்சிகள், பிராணிகள் எல்லாம் உண்டு மகிழ்வதை கண்டு மகிழ்ந்திருப்பார். எங்கள் அம்மாவை இழந்து தவிக்கும் எங்களுக்கு உங்களின் இழப்பு வெந்த புண்ணில் வேல் பாச்சியது போல் இருந்தது.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

உலகில் வாழ வேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவன் வானில் வாழ்வதாக சொல்லப்படும் தெய்வத்துக்கு இணையாக வைத்து மதிக்கப்படுவான். அத்தனை அருங் குணங்களும் அமைந்த சித்தப்பாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி**

**பெறாமக்கள்**

**(மூத்த மைத்துனியின் பிள்ளைகள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஆசை சித்தப்பா

அன்பு, அமைதி, பண்பு, பாசம்
நேர்மை, நிதானம், கடமை, காருண்யம்
அனைத்தையும் தன்னகத்தே அமையக் கொண்ட
எங்கள் ஆசைமிகு குட்டிச் சித்தப்பாவே.

எங்கள் தந்தையை இழந்து துயர் உற்ற வேளையிலே
எங்களை அன்பு காட்டி அரவணைத்த அன்பான சித்தப்பாவே
நாம் கல்வியிலே மேலோங்கி பல கலையும் கற்றிடவே
பாசமுடன் பல வழிகள் வகுத்தீர்கள்
எங்களின் மேன்மை கண்டு அளவில்லா
ஆனந்தம் கொண்டீர்கள் சித்தப்பாவே

எங்கள் மணப்பருவத்தின் போதும்
தந்தைக்கு தந்தையாய் இருந்து
கடமைகள் பல செய்த சித்தப்பாவே
நாம் தூரதேசத்தில் இருக்கின்ற போதும்
அலைபேசி மூலம் அழைத்து உறவாடிய
நாட்கள் எம் பசுமை பக்கங்களில்
அழியா நினைவுகளாய் பதிந்துள்ளன சித்தப்பா !

எங்கள் பிள்ளைகள் குட்டித்தாத்தா என்று
பாசத்துடன் உறவாடி மகிழ்வார்கள் - இனி
"எங்கள் குட்டித்தாத்தா எங்கே?" என்று
கேட்டால் என்ன பதில் சொல்வோமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் எதை நினைத்து ஆறுதல் அடைவது
என்று தெரியாமல் தவிக்கிறோம் சித்தப்பா !
சிந்து, சுமணா என்று அன்புடன் அழைக்கும்
ஒலி எம் காதுகளில் இன்னும்
ஒலித்துக் கொண்டிருக்கின்றது சித்தப்பா.

சித்தியும், பிள்ளைகளும் இத் துயரிலிருந்து ஆறுதல் அடையவும், சித்தப்பாவின் ஆன்மா சாந்தியடையவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி...!!!**

**என்றும் உங்கள் நினைவில் வாழும்**
**பெறாமக்கள்**
**சிந்து, சுமணா.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் இரங்கல்

பண்பும் பாசமும் மாறாத மாமாவே!..
எம்மை கடந்து செல்கையில் புன்னகையில் கடப்பீரே!
வீட்டுக்கு வந்தால் வெறுங்கையுடன்
அனுப்ப மனமில்லாதவரே
மருமக்களே! என்று அழைக்காவிடினும்
மகள் போல அன்பு அளித்தவரே!
பலகதைகள் பேசாவிடினும் ஒருசொல்
பல அறிவுரை கூறுமே
காலனவன் கைப்பிடியில் இருந்துநீர்
மீண்டுவருவீர் என்று இருந்தவேளையிலே.
உம் மௌனம் போல் அமைதியாக சென்றதேனோ!

**உம்பிரிவில் துயருறும்**
**மருமக்கள்.**
**தாரணி, ஜெனனி, கஸ்தூரி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் யோகா அத்தையின் ரூபோட்டி மாமாவே...

எங்கள் யோகா அத்தையின் ரூபோட்டி (240) மாமாவே
கறந்த பாலின் நிறம் போல் தூய்மையான மனமுடைய துரை மாமாவே
என்றும் மாறாத உங்கள் பணிவான குணமும்
காலநேரமின்றி உழைக்கும் உங்களின் விடாமுயற்சியும்
பிழைகளைச் சுட்டிக்காட்டும் போதுள்ள கடுமையிலும்
தணிவான பேச்சும்
இனி என்று காண்போமோ மாமா
உங்களின் தளர்ந்த உடல் கண்டு தயங்கிப் போனோம் நாம்
காலனை வென்றுவிடுவோம் என்றிருந்தோம்
கனவெனக் கலைந்ததேனோ ரூபோட்டி (240) மாமாவே

**உங்கள் பிரிவால் துயருறும்**
**மருமகன்கள்**
**பிரதாப், கோகுலன்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரங்கல் பாமாலை

மகனே என்று உறவாட மனமிருந்தும், வாய்ப்பே இருக்கவில்லை
கனவாயே காலமெல்லாம் கடந்துவிட, நீயும் போய் விட்டாய்
உனது நலன் பாராது ஊருக்கு உதவியதை
ஊராரே சொல்லக் கேட்டோம் உத்தமன் தான் நீமகனே.

உறவுகளுக்குதவி செய்தாய், உன் போக்கில் வாழ்ந்திட்டாய்
பிறர் நலன்கள் பேணிநின்றும், உன் சுகத்தை பேணவில்லை
அறவழியே வாழ்ந்தவன் நீ, குறை எதுவும் விடவில்லை
இறைவனடி சேர்ந்துவிட்டாய் இனிப்பிறவி உனக்கில்லை

பண்பான பிள்ளைகளும் பத்தினியாம் மனைத்துணையும்
நீ சோர்ந்துவிட, கண்போல் உனைக்காத்தார்
அன்பான மருமக்கள், பெறாமக்கள் என்றெல்லோரும்
உன் நலனைப் பேணி உன்னுடனே நின்றாரே

உற்ற நல் சோதரரும் உனைக்காக்க வேண்டுமென்று, தாம்
பெற்றபெருஞ் செலவெல்லாம் தொகையென்றே
பார்க்கவில்லை, ஆனாலும்
மற்று மனம் கொண்டு வல்லவனாம் தெய்வம் அவன்
சற்றும் கலக்கமின்றித் தன்னுடனே சேர்த்துவிட்டான் .

சலசலப்பே இல்லாமல் சத்தியத்தைக் கைக் கொண்டு
உத்தமனாய் வாழ்ந்துவிட்டாய் உனக்கெதுவும் இனிவேண்டாம்
நித்தியமாய் வாழ்வாய் நிமலனடிக் கீழ், நீயும்
பத்திரமாய் உன் குடும்பம் இங்குபலம் பெற்றுவாழச்செய்

**சின்னம்மா**
**திருமதி.சேதுப்பிள்ளை வரதராசா**
**(ஓய்வுநிலை ஆசிரியை)**
**கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புடன் நினைவு கூருகிறோம் உம்மை..

பார்போற்றும் பசுந்தீவாம் நெடுந்தீவில் கதிர்பரப்பும் கதிரவன் வந்துதிக்கும் திசைக்கண்ணில் எமது புஸ்பம் மாமியின் மக்கட் செல்வங்களில் ஆறாவது புதல்வனாய் வந்துதித்தீர். எந்நேரமும் சுறுசுறுப்பு, நெற்கதிர் வயல்களுடன் நேரம் செலவழிப்பு, ஓயாத பணிக்குள்ளும் புன்சிரிப்பு, பூவைப்போன்ற இதமான பேச்சு, நிதானமான நடையும் கொண்டு, அமைதியின் இருப்பிடமாய் அன்பின் பிறப்பிடமாய் ஆசைமனைவியுடனும் பாசம் பொழிந்து வளர்த்த பிள்ளைகளுடனும் இன்புற்று, தன் உழைப்பால் உள்ளங்கை நிறைத்து வாழ்ந்தவர் பசுபதி துரைரத்தினம் அவர்கள்.

குழந்தையாய் சிறுவனாய் இளையோனாய் குடும்பத்தலைவனாய் சமூகசேவகனாய் செழிக்கவைக்கும் விவசாயியாய், தனக்கு மட்டுமன்றி தான் சூழ்ந்து வாழும் உறவுகள் மற்றும் சமூகத்திற்கும் தோள் கொடுத்து நின்றவர் இவர். இன்று ஏற்கமுடியாத பயணத்தை மேற்கொண்டுவிட்டீர் எனும் போது எம்மனம் நொருங்கிப்போகிறது.

உமது பிரிவில் துயருற்றிருக்கும் உம் அன்புமனைவி ஆருயிர் பிள்ளைகளிற்கு எவ்வாறு ஆறுதல் கூறுவது என்று புரியவில்லை. எனினும் இயற்கையின் நியதி இது வென்றெண்ணி உன் இன்னுயிர் எல்லாம் வல்ல இறைவனின் சந்நிதிக்குள் இளைப்பாறும் என்று இறைஞ்சி உன்குடும்பத்தாருக்கும் உறவுகளுக்கும் ஆறுதல் கூறி ஆத்ம சாந்திக்காய் அஞ்சலித்து நிற்கின்றோம்.

**இங்ஙனம்**

**கோபால் மாமா குடும்பம்.**

**கல்மடு, கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் நிறைந்த மருமகன்

எமது மனத்தில் நிறைந்திருந்த அன்பிற்குரிய மருமகன் அமரர் பசுபதி துரைரட்ணம் மறைந்து விட்டார். ஆயினும் அவரது சிரித்த முகத்தையும் திருநீறு பூசிய நெற்றியையும் அன்பான பார்வையையும் அடக்கமான போக்கையும் மனத்துக்கண் மாசிலனாய் வாழ்ந்த வாழ்வையும் என்றுமே எம்மால் மறக்க முடியாது.

நீதி, நியாயம், நேர்மை எனும் பண்புகளை கொண்டிருந்த அவர் அனைவருடனும் அன்பாகப் பழகினார். அதனாலேயே அவரை அவ்வூர் - பெரியதம்பனை மக்கள் அனைவரும் விரும்பினர். ஊர் அமைப்புக்களின் தலைமைப் பொறுப்புக்களில் அமர்த்தினர். காய்தல், உவத்தலின்றி நடு நிலையாளராய் கடமையாற்றினார். அவர் தம் பண்பாலும், பணிவாலும் பலரின் பாராட்டுகளையும் பெற்றுக் கொண்டார்.

அவருடன் பழகிய போதெல்லாம் அவதானித்தவை அதிகம் உண்டு. அவற்றுள் பொறுமைப் பண்பு போற்றத்தக்கதாக அமைந்திருந்தது. எவருடனும் கோபப்பட்டதைக் கண்டதே இல்லை. பொறுமையின் பொக்கிசமாய் வாழ்ந்தார். ஒருவர் நோய்வாய்ப்பட்டு இயலாமையுடன் இருக்கும்போது கோபப்படுவதும், அடம்பிடிப்பதும் அநேகரிடம் காணப்படும் மனித இயல்பு. அந்த நேரத்தில் கூட அவரிடம் அதனைக் காண முடியவில்லை. யார் எதைச் சொன்னாலும் அதைக் கேட்டு அப்படியே நடந்து கொண்டார்.

உழவுத் தொழிலே உயர்வானது எனக்கொண்டார். அதற்காகவே வாழ்ந்தார். அன்பர்களிடத்தே ரூபோட்டி எனும் அடைமொழியையும் பெற்றுக் கொண்டார். ஊண் உறக்கமின்றி அல்லும், பகலும் அயராது உழைத்தார். "முயற்சி தன் மெய் வருந்த கூலி தரும்" என்பதைத் திடமாக நம்பினார். தன் உடல் நலத்தில் கவனம் காட்டாது கமத்திலேயே காலத்தைக் கழித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமக்காணிகள் பலவற்றை வாங்கிக் கொண்டார். களிப்புற்று இருக்கவேண்டிய காலத்தில் காலன் அவரைக் கவர்ந்து விட்டான். கலங்கித் தவிப்பதன்றி வேறெதனை நாம் செய்வோம்.

இவரின் இறுதிக் காலத்தில் என்றும் இணைபிரியாதிருந்து கவனித்து வந்த மனைவி டயோசினியினதும், அன்பு பிள்ளைகள் அட்சயா, அபிநயா மற்றும் சகோதரர்கள் குறிப்பாக இவரது அக்கா கோமளம், உறவினர்கள் எல்லோரும் இவரது தேறுதலில் தோள்கொடுத்து நின்றதை உறவின் உயர்ந்த நிலையை எம்மத்தியில் எடுத்துக்காட்டி நிற்கின்றது. திடீரென எப்படி இப்படி நடந்தது என நம்பமுடியவில்லை.

இன்றிருந்தார் நாளை இல்லை என்பது உறுதி. வாழும் போது எப்படி வாழ்ந்தார் என்பதிலேயே ஒருவரின் சிறப்புத் தங்கியுள்ளது. மரணத்தால் ஒருவரின் மாண்புகள் மறக்கப்படுவது இல்லை. நெஞ்சிருக்கும் வரை உன் நினைவுகள் நிலைத்திருக்கும். அந்த நினைவுகளில் உன் முகம் நிறைந்திருக்கும்.

உற்றார் உறவினர்களால் மட்டுமன்றி மற்றவர்களாலும் மறக்க முடியாத மனிதராக வாழ்ந்து மறைந்த மருமகன் துரைரத்தினம் என்றும் எம் நெஞ்சங்களில் நிறைந்திருப்பார். அவரது ஆத்மா ஆண்டவன் அடியில் அமைதி அடைய வேண்டுவோமாக!

என்றும் உம் நினைவுகளுடன்

**இராசா மாமா**
**(ஓய்வுநிலை வருமானவரி உத்தியோகத்தர்)**
**கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் குல இரத்தினமே...

எம் குலத்தின் தலைமகளாம்
பெரியக்காவின் தாய்மையால்
ஆறாம் இரத்தினமாய் - எம்
சொந்த மண்ணில் பிறப்பெடுத்தாய்...
தாய் மாமன் உரிமையோடு
தலை நிமிர்ந்தேன் - உன்னை
அரவணைத்து அக மகிழ்ந்தேன்.

நீ வளர்ந்த மண்ணில்
உழைப்பொன்றே உயிர் மூச்சாய்க் கொண்டாய்
உழைப்பால் உயர்ந்து வந்தாய் - உன்
திறமை கண்டு பெருமையுற்றோம்.

இதமான துணையோடு - நீ
இல்வாழ்க்கை வாழ்ந்த மண்ணில்
பேரெடுத்தாய் பெருமகனாய் - ஊரார்
போற்ற வாழ்ந்து வந்தாய்,
ஆழ்கடல் திரவியம் போல்
அழகான இரு முத்துக்கள்
சிரித்தமுகம் மாறாது - உனை
மெய் சிலிர்க்க வைத்திருக்கும்

வேளாண்மை கண்டாய்
உணவே மருந்தென்று- உன்
உழைப்பால் உறுதிபெற்றாய்.
இரவு பகல் பாராது – நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட பாடெல்லாம் உனை
நோயாளியாக்கியதா...
நோயுற்றாய்... சிகிச்சை பெற்றாய்...
மீண்டு வந்தாய் - உன்
தேக முன்னேற்றம் கண்டு
ஆறுதல் கொண்டோம்....

இடை நடுவில் இவ் உலகிற்கு
விடைகொடுப்பாயென்று
கனவிலேனும் யாரும் நினைக்கவில்லை.
பொறாமை கொண்டானோ – காலனவன்
பாசம் என்று கூறி
உன் மேல் கயிறிட
பதறவில்லையா அவன் கரங்கள்.

இல்லத்தாள் தனித்திருக்க– உன்
செல்வங்கள் தவித்திருக்க சென்றுவிட்டாய்.
நல்லவர்கள் என்றும்
நலிந்து போவதில்லை,
உறவெல்லாம் தலைவணங்கி
உனை வழியனுப்பி வைக்கின்றோம் - உன்
ஆத்ம சாந்திக்காய் ஆண்டவனை தான்
வேண்டி....!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**துரைமாமா**
**(ஓய்வுநிலை அதிபர்)**
**வவுனியா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனத்திரையில் உன் நினைவுகள் தம்பி...

பாசத்திற்கு இலக்கணமாய் - என்
மனத்திரையில் உன் நினைவுகள்
என்றும் விலகாதடா தம்பி - உன்
முகங்காண ஏங்குதடா என் மனம்
காலத்தின் தேவையோ கடைசி நொடியில்
உன்னைக்காண முடியவில்லை என்னால் தம்பியே...
மனதொல்லாம் உன் நினைவுகளுடன்
உன் அண்ணா நான் மனமுருகி எழுதுகின்ற சிலவரிகள்
உன் பாதக்கமலங்களுக்கு,
சமர்ப்பணமடா தம்பி

**அண்ணன்**
**பிள்ளைநாயகம்.**
**பிரித்தானியா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவென இருந்த உழவாளன்

அப்போது எனக்கு 19 அல்லது 20 வயதிருக்கும். என் நண்பன் ஒருவனுடன் கைதடி நாவற்குழி வழியாக தென்மராட்சிக்கு போய்க்கொண்டிருந்தேன். நண்பன் பாசையூரைச் சேர்ந்தவன். அத்துடன் யாழ்நகரப் பகுதியை தாண்டி வேறு ஊர்கள் பற்றிய அறிமுகமும் இல்லாதவனாகவுமிருந்தான். அன்று கைதடியில் சூடடிப்பு நடந்து கொண்டிருந்தது. அதைக்கண்ட நண்பன் பெரும் ஆச்சரியத்துடன் அது என்னவென்று கேட்க விளக்கமாக கூற வேண்டியிருந்தது.

பசுப்பால் கம்பனி ஆலைகளில் உற்பத்தி செய்யப்படுவதாக பெருநகரங்களில் வசிக்கிற பிள்ளைகள் சொல்லக் கேட்கிற போதெல்லாம் இந்தச் சம்பவம் என் நினைவுக்கு வரும். கூடவே ஆடுமாடுகளையும் விவசாயத்தையும் நான் கண்டு விளங்கிய சிறுவயதும் மல்லாவியும் நினைவுக்கு வரும்.

அவ்வப்போது பாடசாலை விடுமுறை நாட்களில் பெரியம்மா வீட்டில் போய்நிற்கிற போது தான் சின்னத்தம்பி அண்ணா வயல் செய்வதை பார்க்க கிடைத்திருக்கிறது. சேற்று வயலில் புல் மிதிக்கிற வேலைதான் அவர் முதலில் சொல்லித்தந்தது. அப்போது மூன்று சோடி உழவு மாடுகள் இருந்தன. பெரியம்மா வீட்டில். சின்னத்தம்பி அண்ணாவோடு பிற்றண்ணா, அப்பன் அண்ணா அல்லது சம்பளத்துக்கு வருகிற ஆட்கள் யாராவது உழுவார்கள். நீண்ட கெஞ்சலுக்கு பிறகு எனக்கும் வாய்ப்பு கிடைத்தது. வெயில் சுட்டுவிடும் என்பதால் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அதுவும் சின்னத்தம்பி அண்ணாதான் பழகு என்று பழக்கினார். உழவு, விதையை விசிறுவது, மறுத்துழுவது என்று விதைப்பின் படிகள் எல்லாம் அப்படித்தான் எனக்கு தெரிய வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சால், ஏர், கொழு, மேழி, படவால், தண்டு,நுகம், கிட்டி, இன்னும் சூடடிக்கிற களம், வேலைக்காரன் தடி, முறம், புசல், தண்ணி இறைக்கிற பட்டை, கிண்டி... இந்த சொற்களை எல்லாம் என் சொற்களஞ்சியத்தில் சேர்த்துவிட்டவர் சின்னத்தம்பியண்ணா தான்.

மல்லாவி ஆக்கள் துரையண்ணை எண்டுதான் கூப்பிடுவினம். பெரியப்பாவும் பெரியம்மாவும் அவருக்கு மூத்த சகோதரங்கள் எல்லாம் செல்லத்தம்பி எண்டு கூப்பிடுவினம். இளையவைக்கு சின்னண்ணா. றாஜி, அரங்கன், பூத்தம்பிக்கெல்லாம் அண்ணையங்கிள். மற்றும் செல்லத்தம்பி மாமா, சின்னன்னாமாமா என்றும் இளம் உறவுகள் அழைத்தனர். மற்ற எல்லாருக்கும் அவர் சின்னத்தம்பி அண்ணா தான்.

நெடுந்தீவில் இருந்து மல்லாவிக்கு பிற்றண்ணாவும் சின்னத்தம்பி யண்ணாவும் தான் பெரியப்பாவுடன் முதலில் வந்ததாகவும் அந்த காணிகள துப்பரவாக்கி உருவாக்கி எடுத்ததாகவும் பிற்றண்ணா அப்ப நிறைய சொல்லுவார். இப்ப யோசிச்சா அதெல்லாம் உண்மையில் சாதனைக் கதைகள் தான். அதிலும் சின்னத்தம்பி அண்ணாவை தான் பிற்றண்ணா நாயகனாக்கிச் சொல்லுவார். அப்படி ஒரு கடின உழைப்பாளி எங்கள் சின்னத்தம்பி அண்ணா.

தம்பனைக்கு போனபிறகு "ரூபோட்டியர்" எண்டுதான் அறியப் பட்டிருந்தார். Massey Ferquson 240 ரக்டர் ஒன்று வச்சிருந்ததால அந்த பெயர் அவரோடு ஒட்டிற்று. அதை முள்ளிவாய்க்கால்ல விட்டுட்டு வந்து பிறகு போய்த்தேடினார், அது இருந்தவுடன் கொண்டுவந்து அத வச்சு வேலை செய்து கொண்டிருந்தார்.

பின்னேரங்களில் கோயிலடியில வெட்டியாக நிண்டு கதைக்கிற கூட்டத்திலோ கடையடியில சந்தியில நிக்கிற கும்பலிலோ ஒரு நாளேனும் இவர நான் காணேல்ல. தனக்கொரு கருத்திருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுசரியானது எண்டு இவர் எங்கயும் விவாதிச்சும் நான் காணேல்ல. இதை இவர் தலைவராயிருந்த கமக்காரர் அமைப்புக் கூட்டத்துக்கு போய்ப் பார்த்திருக்கலாம். வாய்க்கால் பங்கு குடுக்கிறநேரம் போய் பாத்திருக்கலாம். வயல்ல தோட்டத்தில அல்லது பட்டியில ஏதோ ஒரு வேலை செய்தபடியே இருப்பார்.

அதிகமாய் கதைக்க மாட்டார் எண்டுதான் பலரும் சொல்லுவினம். ஆனாலும் நல்ல நண்பர்களை வைத்திருந்தார்.

மல்லாவியில் குஞ்சுகுளத்துக்கு பக்கத்தில ஓர் ஏக்கர். அதுதான் அவற்ற ஆரம்ப தோட்ட இடம். ஒரு சின்னக்கொட்டிலும் சாக்கு கட்டிலும் இருக்கும்.

சின்னவெங்காயம், பம்பாய் வெங்காயம் எல்லாம் போடுவார். கரட், கோவா, லீக்ஸ் எல்லாம் மல்லாவியில முதல் முதல் இந்த ஓர் ஏக்கரில தான் விதைச்சது.

மத்தியான சாப்பாடு குடுக்கதான் அதிகம் போயிருக்கிறன். எத்தின கறி இருந்தாலும் இரண்டு சின்னவெங்காயத்தை உரிச்சு வச்சுத்தான் சாப்பிடுவார். சிலவேளை பச்சைமிளகாயும் அந்த இடத்தை தட்டிப் பிடித்துவிடும்.

பெரியம்மா வீட்டில் உருளைக்கிழங்கு என்றோர் உழவு மாடு இருந்தது. பெயருக்குத்தான் அது உழவுமாடு. மற்றபடி அதுக்கு வேலைசெய்ய கள்ளம் என்று சின்னத்தம்பி அண்ணா சொல்லுவார். அதன் பள்ளிக்கூட பெயரை சுருக்கி உருளை என்று தான் கூப்பிடுவார். இவரது கூச்சல்களுக்கெல்லாம் உருளை தனக்கே உரிய பாணியில் பதில்சொல்லிக்கொண்டிருக்கும்.

**"நிலம் என்னும் நல்லாள் நகும்"** - என்றானே ஐயன் வள்ளுவன். அந்த வரிகளை வரித்துக்கொண்டாரோ என்னவோ ஓயாமல் உழைத்துக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி உழைத்தவர். மூப்பெய்தி ஓய்வாக இருக்கும் காலம் மட்டும் எம்மோடு இருந்திருக்க வேண்டும். பாதியிலே பிரிந்து போய்விட்டார்.

மீள முடியாத தூரம்.
நாங்கள் மீட்டுவரமுயாத தூரம்.
மீண்டு வரமுடியாத துயரம்..
சென்று வாருங்கள் அண்ணா.
எங்கள் நினைவுகளில்
எப்போதும் நீங்களிருப்பீர்கள்.
ஆன்ம சாந்தி பெறுக.
அந்தச் சிவலோக நாயகன் சேவடியில் சேர்க..

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**உங்கள் தம்பி.**
**கு.லக்ஸ்மணன்**
**கனடா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரங்கல் உரை

அமரர் பசுபதி துரைரத்தினம் அவர்கள் பெரியதம்பனை கிராமத்தில் தன்னிகரற்ற சிறந்த விவசாயி ஆவார். அவர் கிராமத்தின் கமக்கார அமைப்பின் தலைவராக சிறப்பு தலைமைத்துவ பண்புடன் பலவிடயங்களில் அரும்பணி ஆற்றியுள்ளார். அத்துடன் சனசமுக நிலையம், கிராம அபிவிருத்தி சங்கம், ஆலய பரிபாலன சபை ஆகியவற்றின் முக்கியபதவிகளை வகித்து இக்கிராமத்துக்கு பல சேவைகளை ஆற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னாரின் பிரிவால் துயறுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கின்றோம்.

**மு.அமிர்தலிங்கம்**
**தலைவர்,**
**கமக்காரஅமைப்பு**
**பெரியதம்பனை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைந்தாயோ துரை

துரைரத்தினம் நீ மறைந்த செய்தி என் செவிக்கு எட்டியபோது என்னால் நம்ப முடியவில்லை. துரை எங்கே இருக்கிறான் ரவி எங்கே இருக்கிறான் என உன் உறவுகளை காணும் போதெல்லாம் நான் விசாரிப்பேன். அவர்களும் உங்களைப் பற்றிக்கூற நான் சந்தோசப்படுவேன். ஆனால் நீ மோசமான நோயால் பாதிக்கப் பட்டிருந்தது. எனக்கு தெரியவே தெரியாது உன் உயிரைக் குடித்த இயமன் கொடியவன் தான்.

கடலலைகள் தாலாட்டும் நெடுந்தீவில் பிறந்தாய். வயல் வளம் சிறந்த பாரதிநகரிலும் திருநகரிலும் வளர்ந்தாய். யோகபுரம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றாய். என் போன்ற எத்தனையோ ஆசிரியர்களின் மாணவ மணியாக திகழ்ந்தாய். அமைதியான நடை, எம்மை கண்டவுடன் ஒரு களங்கமற்ற சிரிப்பு, ஆசிரியர்களை பெரியவர்களை கண்டால் மரியாதை காட்டும் பண்பு இவற்றால் நீ என் பிரியமான மாணவனானாய். உன் அம்மா என்னைக் காணும் போதெல்லாம் என் பிள்ளைகள் எப்படி என்றே கேட்பார். அவர் ஆசைப்பட்டதைப் போல் நீயும் உன் சகோதர சகோதரிகளும் திறமைசாலிகளாக படித்தீர்கள். உன் போன்ற மாணவச் செல்வங்களை படிப்பிக்கக் கிடைத்தது எங்களுக்கு கிடைத்த பெரும் பாக்கியம்.

அக்கா மங்களேஸ்வரியின் மரணம் தந்த துயரம் இன்னுமே மாறவில்லை. அதற்கிடையில் நீயும் போய்விட்டாய் துரை. உன்னை இழந்து தவிக்கும் உன் குடும்பத்தினர். உறவுகளோடு நானும் என் குடும்பமும் பங்குகொள்கிறோம். உன் ஆத்ம சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**உன்னை என்றும் மறவாத ஆசிரியை**
**திருமதி.ந.புவனேஸ்வரி (ஓய்வு பெற்ற அதிபர்)**
**யோகபுரம் ம.வி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவில் எழுந்த சில துளிகள்

திரு.திருமதி. பசுபதி புஸ்பவதி தம்பதியர் பெற்றெடுத்த மகனே, செல்லமகனாக இருந்தால் செல்லத்தம்பி எனப் பெயர் வந்ததோ, நீர் சிறுகுழந்தையாக இருந்தபோது உம்மை சின்னத்தம்பி என அழைத்ததால் சின்னத்தம்பி என்ற நாமம் பெற்றீரோ? உமக்கிட்ட பெயர் துரைரத்தினம். பள்ளிப் பருவத்தில் வழங்கிய பெயர் அனேகருக்கு தெரியாததால் யார் அந்த துரைரத்தினம் என கேட்கவும் செய்தார்கள்.

அமைதியும் சாந்தமும் உன் பண்பு. அன்பும் கருணையும் கொண்ட சகோதரனே உங்களில் ஒருவராய் வாழ்ந்த காலத்தில் என்னையும் உங்கள் சகோதரியாய் ஏற்று உதவிகள் செய்த பண்பாளனே. உம் வாழும் காலம் நீண்டிருக்க இடையில் காலன் உம்மை கவர்ந்தது ஏனோ? நோயுற்ற காலத்தில் உடல் தேறிவருகின்றது என்ற செய்திகள் அறியும் போது மனம் மகிழ்ந்தேன். உம் மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியடைந்தேன். காலங்கள் ஓடினாலும் நினைவுகள் மாறாது தம்பி உடன்பிறவா சகோதரனே உம் இறுதி ஊர்வலத்துக்கு முன் உம்மை வந்துபார்த்த போது உம் முகம் ஒளியாக இருந்ததுவே. உயிர் பிரிந்தது என நம்பவே முடியவில்லை.

ஒருபக்கம் சகோதரர்களின் சோகம், இன்னொரு பக்கம் எம் தலைவன் எம்மைவிட்டுப் போய்விட்டார். இனி என்ன செய்வது என கலங்கித் துடிக்கும் அன்பு துணைவியார், மறுபக்கத்தில் உள்ளத்தை எல்லாம் கலங்க வைத்து சோகத்துடன் அப்பா அப்பா என்று இனி யாரை அழைப்பது எனக் கலங்கும் உம் பிள்ளைகள், அப்பா எமக்கில்லையே என தினமும் மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடவிட்டு மீளாத்துயில் கொண்டாயோ, சகோதரா ஆறுதல் கூற வார்த்தைகளில்லை. என்றும் உம் ஆசிகள் அவர்களுக்கு கிடைக்க இறைவனை வேண்டுகின்றேன். ஆறாத்துயர் உற்றிருக்கும் உம் மனைவி பிள்ளைகளுடனும் சகோதரர்களுடனும் நானும் சேர்ந்து ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**ஈஸ்வரிதேவி பெரியதம்பி**
**(ஓய்வு பெற்ற ஆசிரியை)**
**மு/யோகபுரம் மகா வித்தியாலயம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்பண்பாளார்

**"அன்பிலார் எலாம் தமக்குரியர் அன்புடையர்
என்பும் உரியர் பிறட்கு"**

எனும் வகையில் பார்போற்றும் பசுந்தீவாம் நெடுந்தீவில் பிறந்து நண்பராய் ஆற்றல்மிகு சிந்தனையாளராய் கடவுள் பத்தி கனிவான பேச்சு, அன்பு நிறை உள்ளங்கொண்டு சிறுவயது முதல் ஆன்மீக இறை சிந்தனையாளராய் வந்தோரை வரவேற்று விருந்தூட்டி வழியனுப்பும் ஈகையாளர் மதிப்பிற்குரிய அமரர் பசுபதி துரைரத்தினம்.

**"தாளாற்றி தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு"**

என்பதற்கிணங்க மனிதனை உயிர் வாழவைக்கும் மேன்மைமிகு விவசாய துறையிலே சிறந்த எடுத்துக் காட்டாக தன் சிறுவயது முதற்கொண்டு தன் தாய் மண்ணிலே வரகு, தினை, சாமி, போகப் பயிர்கள் என விளைவித்து கைதேர்ந்த தேர்ச்சியாளராய் ஊருக்கே எடுத்துக்காட்டாய் திறமைமிக்க நடைமுறைகளை கைக்கொண்டு சோர்வின்றி தன்னுயிர் பாராது விவசாயத்தில் ஆற்றல் மிக்கவராய் வாழ்ந்து வன்னி மண்ணிலும் பாரிய விவசாயியாய் தன்னை அடையாளப் படுத்தி, உழுது, விதைத்து, அறுத்து, உலகுக்கே சோறு போட்டு இறையடி சென்ற அமரர் துரைரத்தினம் அவர்களின் ஆத்மா ஆலமாவனத்தான் திருவடியில் இளைப்பாற வேண்டுவதோடு ஆழ்ந்ததுயரில் இருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவிக்கின்றோம்.

**விஜயகுமாரன் குடும்பம்
நெடுந்தீவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெங்கலச் செட்டிகுளம் பிரதேசசபை தவிசாளர் அவர்களது இரங்கல் செய்தி

**“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்”**

வவுனியா பெரிய தம்பனை கிராமத்தில் வசித்து வந்த அமரர் பசுபதி துரைத்தினம் (துரை அண்ணா) அவர்கள் நற்பண்புகள் நிறைந்த பண்பாளராக வாழ்ந்து மறைந்துள்ளார்.

பெரிய தம்பனை கிராமத்தில் செயற்படுகின்ற அனைத்து நலன்புரி அமைப்புகளிலும் தனது பங்களிப்பைச் செய்து வந்துள்ள இவர் பெரியதம்பனை கமக்கார அமைப்பின் கடந்த காலங்களில் தலைவர் பதவி வகித்து கிராமத்தில் உள்ள விவசாயிகளது தேவைகளையும் அபிவிருத்தி பணிகளையும் சிறப்பான முறையில் செயற்படுத்தியிருந்தார். கிராம அபிவிருத்திச் சங்கம், ஆலய பரிபால சபைகள், சனசமூக நிலையம் மற்றும் பொது அமைப்பு களில் தன்னை முழுமையான உறுப்பினராக அர்ப்பணித்து மக்களுக்கான சேவைகளை ஆற்றியுள்ளார்.

சமூக அவலங்கள், அநீதிகள், எதுவாயினும் முன்னின்று குரல் கொடுப்பதோடு சமூகத்தை நல்வழிப்படுத்துவது, துன்பப்படும் மக்களுக்கு உதவிகள் புரிவது என தனது வாழ்நாளில் பலவாறு உதவிகள் புரிந்துள்ளார். கிராமிய மட்ட செயற்பாடுகள் கடந்து மிகத் தீவிரமான தமிழ்ப்பற்றாளராகவும் இறுதி மூச்சு வரை தனது பங்களிப்பை செய்துள்ளார். பொதுவேலை திட்டங்களில் பல்வேறு வழிகளிலும் எனக்கு பல்வகையான உதவிகள் செய்திருந்தாலும் 2018 இல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் தேசியத்தின் பால் அவரது அக்கறை காரணமாக செட்டிக்குளம் பிரதேச சபைக்கு என்னை வட்டார உறுப்பினராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்புவதற்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் அவர் உறவினர்களிடமும் நண்பர்களிடமும் கூறி வாக்களிக்க வைத்து என்னை வெற்றி பெற வைத்ததும் வாழ்நாளில் மறக்கமுடியாதது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நான் வெற்றி பெற்றதைக் கேள்வியுற்று என்னை கட்டி அணைத்து முகமலர்வோடு வாழ்த்துச் சொன்னது என் மனக்கண்ணில் இப்பொழுதும் நிழலாடுகிறது.

எனது அன்புக்குரிய துரை அண்ணாவின் ஆன்ம ஈடேற்றத்திற்காக பிரார்த்தனை செய்யும் அதேவேளையில் கிராமத்திற்கும், சமூகத்திற்கும் அவர் செய்துவந்த நற்பணிகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதே அவரது ஆன்மாவிற்கு நாம் செலுத்தும் முழுமையான நன்றிக் கடனாகும் என்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல "ஸ்ரீவரசித்தி விநாயகப் பெருமானை" வேண்டுகின்றேன். அன்பான சகோதரன், நண்பன் துரை அண்ணாவின் இழப்பினால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகட்டும்.

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி**

**சு.ஜெகதீஸ்வரன் (சிவம்)**
**தவிசாளர்**
**வெ/செட்டிகுளம் பிரதேச சபை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தோத்திரப் பதிகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் கவசம்



வளர் சிகையைப் பராபரமாய் வயங்கு விநாயகர் காக்க!
வாய்ந்த சென்னி அளவுபடா அதிக சவுந்தர
தேக மதோற்கடர் தாம் அமர்ந்து காக்க!
விளரற நெற்றியை என்றும் விளங்கிய காசிபர் காக்க!
புருவந் தம்மைத் தளர்வில் மகோதரர் காக்க!
தட விழிகள் பால சந்திரனார் காக்க!

கவின் வளர் அதரம் கஜமுகர் காக்க!
தாலங்கணக் கிரீடர் காக்க!
நவில்சிபுகம் கிரிசை சுதர் காக்க!
நனி வாக்கை விநாயகர் தாம் காக்க!
அவிர் நகை துன்முகர் காக்க!
அள் எழிற் செஞ்செவி பாசபாணி காக்க!
தவிர்தலுறா திளங்கொடி போல் வளர்மணி
நாசியைக் சித்திதார்த்தர் காக்க! 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமரு பூ முகந்தன்னைக் குணேசர் நனி காக்க!
களம் கணேசர் காக்க! வாமமுறும் இருதோளும்
வயங்கு கந்த பூர்வசர் தாம் மகிழ்ந்து காக்க!
ஏமமுறு மணிமுலை விக்கின விநாசன் காக்க!
இதயந் தன்னைத் தோமகலுங் கணநாதர் காக்க!
அகட்டினைத் துலங்கு ஏரம்பர் காக்க! 3

பக்கம் இரண்டையும் தராதரர் காக்க!
பிருட்(ஸ்)டத்தைப் பாவம் நீக்கும் விக்கினகரன் காக்க!
விளங்கு(கி) லிங்கம் வியாளபூடணர் தாம் காக்க!
தக்க குய்யந் தன்னை வக்கிர துண்டர் காக்க!
சகனத்தை அல்லல் உக்க கணபன் காக்க!
ஊருவை மங்கள மூர்த்தி உவந்து காக்க! 4

தாழ் முழந்தாள் மகாபுத்தி காக்க!
இரு பதம் ஏக தந்தர் காக்க!
வாழ்கரம் க்ஷிப்பிரப் பிரசாதனர் காக்க!
முன் கையை வணங்குவார் நோய்
ஆழ்தரச் செய் ஆசாபூரகர் காக்க!
வீரல் பத்தும் அத்தர் காக்க!
கேழ் கிளறும் நகங்கள் விநாயகர் காக்க!
கிழக்கினிற் புத்தீசர் காக்க! 5

அக்கினியிற் சித்தீசர் காக்க!
உமா புத்திரர் தென்னாசை காக்க!
மிக்க நிருதியிற் கணேசுரர் காக்க!
விக்கின வர்த்தனர் மேற்கென்னுந் திக்கதனிற் காக்க!
வாயுவிற் கசகன்னர் காக்க!
திகழ்உ தீசி தக்க நிதிபன் காக்க!
வடகிழக்கில் ஈசநந்தனரே காக்க! 6




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகதந்தர் பகல் முழுதுங் காக்க!
இரவினும் சந்தி-இரண்டன் மாட்டும்
ஓகையின் விக்கின-கிருது காக்க!
இராக்-கதர் பூதம் உறு வேதாளம்
மோகினி பேய் இவையாதி உயிர்த்திறத்தால்
வருந்துயரும் முடிவிலாத வேக முறு
பிணி பலவும் விலக்கு-பு-பாசாங்குசர்
தாம் விரைந்து காக்க! 7

மதி, ஞானம், தவம், தானம், மானம், ஒளி, புகழ்,
குலம், வண்சரீரம், முற்றும் பதிவான தனம்,
தானியம், கிரகம், மனைவி, மைந்தர், பயில்
நட்பாதிக் கதியாவும் கலந்து சர்வாயுதர் காக்க!
காமர் பவுத்திரர் முன்னான விதியாரும்
சுற்றமெலாம் மயூரேசர் எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க! 8

வென்றி(று), சீவிதம் கபிலர் காக்க!
கரியாதியெலாம் விகடர் காக்க!
என்றிவ்-வாறிது தனை முக்காலுமும் ஓதிடின்,
நும் பால் இடையூறெ(றொ)ன்றும்
ஒன்றுறா, முனிவரர்காள், அறிமின்கள்,
யாரொருவர் ஓதினாலும் மன்ற ஆங்கவர்
தேகம் பிணியற வச்சிர தேகமாகி மின்னும்! 9





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## திருவாசக சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சி னீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி எந்தையடி போற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறையிலும் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்தும் மண்ணிறைந்தும் மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யாய் யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பொருமான் வல்வினையேன்தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கும் மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலன்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும்வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுட ரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனே ஓ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை



படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந் தாமரைபோற் கையும் - துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால்
கல்லுஞ் சொல்லாதோ கவி

வெண்டா மரைக்கன்றி நின்பதம்
தாங்க என்வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ
சகம் ஏழும்மளித்(து)
உண்டான் உறங்க ஒழித்தான் பித்தாக
உண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற்கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு(து)
தார்த்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ
வுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய் வடநூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப்(பு) பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே!
நெடுந் தாட்கமலத் (து)
தஞ்சத் துவசம் உயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் (து) திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழு(து) எளி(து) எய்தநல்
காய், எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங் காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்!
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்
காய், உளங் கொண்டுதொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே!
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமும் அவதான
மும்கவி சொல்லவல்ல
நல்வித்தையும் தந் தடிமைகொள்
வாய், நளி னாசனஞ்சேர்
செல்விக்(கு) அரிதென்(று) ஒருகால
முஞ் சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே!
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்டும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார் நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ(டு)
அரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே!
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண்கண் டளவிற் பணியச் செய்
வாய் படைப் போன் முதலாம்
விண்கண்டதெய்வம் பல் கோடியுண்
டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ?
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சரவணபவ

# கந்தர் சஷ்டி கவசம்



காப்பு

## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைப்போம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கை கூடும் நிமலருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை.

## குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரர் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாம மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ்செயும் மயில்வா கனானர்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவணபவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நாமோ நம
நிபவ சரவண நிற நிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரன் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளியையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடியதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகமொக
நகநக நகநக நகநக நகநக
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்னு
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என் தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுற நல்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழுது மெனை எதிர்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பாரக்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படு மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோட னைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்லறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடனி றங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தம் வலிப்பும் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்கு சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நில்லா தோடநீ யெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் மெனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர் காமத்துறை கதிர் வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சன்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சிஅ ன்னமும் சென்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவள் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒரு நாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க்காண மெய்யாய் விளங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப் பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்தரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழின் தேவாரப் பெருமையை நிலைநாட்டி சீர்காழியில் திருஞான சம்பந்தரால் பாடப்பட்ட தேவாரம்

இருவரிகளில் அமைந்த 11 தேவாரங்களாக இவை அமைந்துள்ளன.

(திருமாலைமாற்று)

பண் - கௌசிகம்

***திருச்சிற்றம்பலம்***

யாமாமாநீயாமாமாயாழீகாமாகாணாகா
காணாகாமாகாழீயாமாமாயாநீமாமாயா 1

யாகாயாழீகாயாகாதாயாராராதாயாயா
யாயாதாராராயாதாகாயாகாழீயாகாயா 2

தாவாமூவாதாசாகாழீநாதாநீயாமாமா
மாமாயாநாதாநாழீகாசாதாவாமூவாதா 3

நீவாவாயாகாயாழீகாவாவானோவாராமே
மேராவானோவாவாகாழீயாகாயாவாவாநீ 4

யாகாலாமேயாகாழீயாமேதாவீதாயாவீ
வீயாதாவீதாமேயாழீகாயமேலாகாயா 5

மேலேபோகாமேதேழீகாலாலேகாலானாயே
சேனாலாகாலேலாகாழீதேமேகாபோலேமே 6

நீயாமாநீயேயாமாதாவேழீகாநீதானே
நேதாநீகாழீவேதாமாயாயேநீமாயாநீ 7

நேணவிராவிழயாசைழியேவேகதளேரியளாயுழிகா
காழியுளாயரிளேதகவேயேழிசையாழவிராவணனே 8

காலேமேலேகாணீகாழீகாலேமாலேமேபூ
பூமேலேமாலேகாழீகாணீகாலேமேலேகா 9

வேரியுமேணவகாழியொயேயேனைநிணேமடளோகரதே
தேரகளோடமணேநினையேயேயொழிகாவணமேயுரிவே 10

நேரகழாமிதயாசழிதாயேனனியேனனிளாயுழிகா
காழியுளானினயேனினயேதாழிசயாதமிழாகரனே 11

***திருச்சிற்றம்பலம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஞான சம்பந்தர் தேவாரம்

குளிர், சுரம் முதலிய உடல் நோய் நீங்கவும், முற் பிறப்பில் செய்த தீவினையால் வரும் துன்பம் அகலவும், நம்மேல் பிறர் ஏவிய பில்லி, சூனியம், ஏவல் முதலியன நீங்கவும் ஓத வேண்டிய பதிகம். திருநீலகண்டம் என்ற மந்திரத்தின் சிறப்பு உரைப்பது. திருச்செங்கோட்டில், அடியவர்களுக்கு உற்ற குளிர், சுரம் நீங்கத் திருஞானசம்பந்தர் அருளியது.

*திருச்சிற்றம்பலம்*

அவ்வினைக் கிவ்வினையாம் என்று
சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பதும்
உந்தமக்கு ஊனமன்றோ
கைவினை செய்து எம்பிரான்
கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்
பெறா திருநீலகண்டம் 1

காவினை இட்டும் குளம்பல
தொட்டும் கனி மனத்தால்
ஏவினையால் எயில் மூன்று
எரித்தீர் என்று இருபொழுதும்
பூவினைக்கொய்து மலரடி
போற்றுதும்நாம் அடியோம்
தீவினை வந்தெமைத்
தீண்டப் பெறா திருநீலகண்டம் 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முலைத்தட மூழ்கிய போகங்களும்
மற்றெவையும் எல்லாம்
விலைத்தலை ஆவணம் கொண்டு
எமை ஆண்டவிரிசடையீர்
இலைத்தலைச் சூலமும் தண்டும்
மழுவும் இவை உடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்
பெறா திருநீலகண்டம் 3

விண்ணுலகாள்கின்ற
விச்சாதரர்களும் வேதியரும்
புண்ணியர் என்று இருபோதும்
தொழப்படும் புண்ணியரே
கண் இமையாதன மூன்றுடையீர்
உம் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்
பெறா திருநீலகண்டம் 4

மற்றுஇணை இல்லா மலை திரண்டு
அன்ன திண் தோளுடையீர்
கிற்றெமை ஆட்கொண்டு கேளா
தொழிவதும் தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்து
உம் திருவடியே அடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப்
பெறா திருநீலகண்டம் 5

மறக்கு மனத்தினை மாற்றி எம்
ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்
தடிக்கீழ் பிழையாத வண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறித்த மலர் கொடுவந்துமை
ஏத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப் பெறா
திருநீலகண்டம் 6-7

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை
கடிந்தும் கழலடிக்கே
உருகிமலர் கொடுவந்துமை
யேத்துதும் நாம் அடியோம்
செருவில் அரக்கனைச் சீரில்
அடர்த்து அருள் செய்தவரே
திருவிலித் தீயினை தீண்டப் பெறா
திருநீலகண்டம் 8

நாற்றமலர்மிசை நான்முகன்
நாரணன் வாதுசெய்து
தோற்றமுடைய அடியும் முடியும்
தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுது
வணங்குதும் நாம் அடியோம்
சீற்றமதாம் வினை தீண்டப்பெறா
திருநீலகண்டம் 9

சாக்கியப் பட்டும் சமண் உரு
வாகி உடை ஒழிந்தும்
பாக்கியமின்றி இருதலைப்
போகமும்பற்றும் விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடையீர்
அடி போற்றுகின்றோம்
தீக்குழி தீவினை தீண்டப்
பெறா திருநீலகண்டம் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த பிறவியில் பேணி எம்
செல்வம் கழல் அடைவான்
இறந்த பிறவி உண்டாகில்
இமையவர்கோன் அடிக்கண்
திறம்பயில் ஞானசம்பந்தன் செந்தமிழ்
பத்தும் வல்லார்
நிறைந்த உலகினில் வானவர்
கோனொடும் கூடுவரே 11

*திருச்சிற்றம்பலம்*

**தில்லைச் சிற்றம்பலவன் திருவருள் பெற்று, என்றும் இன்பம் பெருக, செல்வ வாழ்வு வாழ ஓத வேண்டிய பதிகம். திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்**

பண்: ***குறிஞ்சி*** ***இராகம்: அரிகாம் போதி***
***தலம்: கோயில் சிதம்பரம்***

**திருச்சிற்றம்பலம்**

கற்றாங்கு எரி ஓம்பி கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. 1

பறப்பைப் படுத்தெங்கும் பசு வேட்டு எரி ஓம்பும்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய
பிறப்பு இல்பெருமானை பின் தாழ்சடையானை
மறப்பு இலார் கண்டீர் மையல் தீர்வாரே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மை ஆர் ஒண்கண்ணார் மாட நெடுவீதிக்
கையால் பந்து ஓச்சும் கழிசூழ் தில்லையுள்
பொய்யா மறைபாடல் புரிந்தான் உலகு ஏத்தச்
செய்யான் உறைகோயில் சிற்றம்பலம்தானே. 3

நிறைவெண் கொடிமாட நெற்றி நேர்தீண்டப்
பிறை வந்து இறைதாக்கும் பேரம்பலம் தில்லைச்
சிறைவண்டு அறை ஓவாச் சிற்றம்பலம், மேய
இறைவன் கழல்ஏத்தும் இன்பம் இன்பமே. 4

செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கிச்
செல்வ மதி தோய செல்வம் உயர்கின்ற,
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய
செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே. 5

வருமாந் தளிர்மேனி மாது ஓர்பாகம் ஆம்
திருமாந் தில்லையுள் சிற்றம்பலம் மேய
கருமான் உரி-ஆடைக் கறைசேர் கண்டத்து எம்
பெருமான் கழல் அல்லால் பேணாது உள்ளமே. 6

அலையார் புனல்சூடி ஆகத்து ஒருபாகம்
மலையான் மகளோடும் மகிழ்ந்தான் உலகு ஏத்தச்
சிலையால் எயில் எய்தான் சிற்றம்பலம் தன்னைத்
தலையால் வணங்குவார் தலை ஆனார்களே. 7

கூர்வாள் அரக்கன் தன் வலியைக் குறைவித்து
சீராலே மல்கு சிற்றம்பலம் மேய
நீரார் சடையானை நித்தல் ஏத்துவார்
தீரா நோய் எல்லாம் தீர்தல் திண்ணமே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோள் நாக(அ)ணையானும் குளிர்தாமரையானும்
காணார் கழல் ஏத்த கனல் ஆய் ஓங்கினான்
சேணார் வாழ்தில்லைச் சிற்றம்பலம் ஏத்த
மாணா நோயெல்லாம் வாளா மாயுமே. 9

பட்டைத் துவராடைப் படிமம் கொண்டாடும்
முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய
நட்டப் பெருமானை நாளும் தொழுவோமே. 10

ஞாலத்து உயர்காழி ஞானசம்பந்தன்
சீலத்தார் கொள்கைச் சிற்றம்பலம் மேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத்தால் பாட வல்லார் நல்லாரே. 11

**திருச்சிற்றம்பலம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நற்குணமும் நற்செயலும் உடைய உயர்ந்தோர் நம் உறவாக அமையவும், தாயினும் நல்ல தலைவனாகிய சிவன் அருள்திறம் நம் வாயினும், மனத்தினும் மன்னி நிற்கவும், திருகோணமலை அமர்ந்தான் திருவருள் வேண்டி ஓத வேண்டிய பதிகம். திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்.**

***பண்: புறநீர்மை*** ***இராகம்: பௌளி***
***தலம்: திருக்கோணமலை***

**திருச்சிற்றம்பலம்**

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே. 1

கடிதென வந்த கரிதனை யுரித்து அவ்வுரி
மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமு னித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடைவைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை
பாக மாகமுன் கலந்தவர் மதின்மேல்
தனித்தபே ருருவ விழித்தழ னாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 3

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற்
றரளஞ் செம்பொனு மிப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் றிரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே. 4

தாயினு நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிந்துநன் மனத்தால் வழிபடுமாணி
தன்னுயிர் மேல்வரும் கூற்றைத்
திரிந்திடா வண்ண முதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவன் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்
சூழ் கோணமா மலையமர்ந் தாரே. 6-7

எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலா
லேத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பு
மிறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புகழாளர்
கோணமா மலையமர்ந் தாரே. 8

அருவரா தொருகை வெண்டலையேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரு மறியா வண்ணமொள் ளெரியா
யுயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே. 9




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றுணுஞ் சமணுமிருந்துணுந் தேரு
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசின ரொருபான்
மெல்லிய லொடுமுட னாகித்
துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே. 10

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்து
முரைப்பவர் கேட்பவ ருயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே. 11

**திருச்சிற்றம்பலம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நவ கோள்களுள் ஒன்றாகிய சனியின் பார்வையால் வரும் அனைத்துத் துன்பங்களிலிருந்தும் நீங்க ஓத வேண்டிய பதிகம். நளன் வழிபட்டுச் சனியின் பிடியிலிருந்து விடுபட்ட தலம் திருநள்ளாறு அங்கே சென்று சிவனை வழிபட்டு இப்பதிகத்தைப் பாராயணம் செய்தால் சனிதோஷம் நீங்கும்.**

**திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்**

***பண்: பழந்தக்கராகம் இராகம்: ஆரபி***
***தலம்: திருநள்ளாறு***

திருச்சிற்றம்பலம்

போகம் ஆர்த்த பூண்முலையாள்
தன்னோடும் பொன்னகலம்
பாகம் ஆர்த்த பைங்கண் வெள்ஏற்று
அண்ணல் பரமேட்டி,
ஆகம் ஆர்த்த தோல் உடையன்,
கோவண ஆடையின்மேல்
நாகம் ஆர்த்த நம்பெருமான்,
மேயது நள்ளாறே. 1

தோடுடைய காது உடையன்,
தோல்உடையன், தொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணும்
ஓர் பாலுடையன்
ஏடுடைய மேல் உலகோடு
ஏழ்கடலும் சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான்,
மேயது நள்ளாறே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்முறையால் ஆற்ற வெண்நீறு ஆடி,
அணியிழைஓர்
பால்முறையால் வைத்த பாதம்
பத்தர் பணிந்தேத்த
மான்மறியும் வெண்மழுவும்
சூலமும் பற்றிய கை
நால்மறையான், நம்பெருமான்,
மேயது நள்ளாறே. 3

புல்க வல்ல வார்சடைமேல்
பூம்புனல் பெய்து, அயலே
மல்க வல்ல கொன்றைமாலை
மதியோடு உடன்சூடி,
பல்க வல்ல தொண்டர்தம்
பொற்பாத நிழல்சேர,
நல்கவல்ல நம்பெருமான்
மேயது நள்ளாறே. 4

ஏறுதாங்கி ஊர்திபேணி,
ஏர்கொள் இளமதியம்
ஆறுதாங்கும் சென்னிமேல்
ஓர் ஆடு அரவம்சூடி
நீறுதாங்கி நூல்கிடந்த மார்பில்
நிரை கொன்றை
நாறுதாங்கும் நம்பெருமான்
மேயது நள்ளாறே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்கள் உச்சிமேல் விளங்கும்
தேவன், இமையோர்கள்
எங்கள் உச்சி, எம்இறைவன்
என்று அடியே இறைஞ்ச,
தங்கள் உச்சியால் வணங்கும் தன்
அடியார்கட்கு எல்லாம்
நங்கள் உச்சி நம்பெருமான்
மேயது நள்ளாறே. 6

வெஞ்சுடர்த்தீ அங்கை ஏந்தி,
விண்கொள் முழவு அதிர,
அஞ்சுஇடத்து ஓர் ஆடல் பாடல்
பேணுவது அன்றியும் போய்ச்,
செஞ்சடைக்கு ஓர் திங்கள் சூடி
திகழ்தருகண்டத் துள்ளே
நஞ்சு அடைத்த நம்பெருமான்,
மேயது நள்ளாறே. 7

சிட்டம் ஆர்ந்த மும்மதிலும்
சிலைவரைத்தீ அம்பினால்
சுட்டுமாட்டிச், சுண்ணவெண்
நீறுஆடுவது அன்றியும்போய்ப்
பட்டம் ஆர்ந்த சென்னிமேல்
ஓர்பால் மதியம் சூடி,
நட்டம் ஆடும் நம்பெருமான்
மேயது நள்ளாறே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணல் ஆகா நஞ்சு கண்டத்து உண்டு,
உடனே ஒடுக்கி
அண்ணல் ஆகா அண்ணல் நீழல்
ஆர் அழல் போல் உருவம்
எண்ணல்ஆகா உள்வினை - என்று
எள்க வலித்து இருவர்
நண்ணல் ஆகா நம்பெருமான்,
மேயது நள்ளாறே. 9

மாசுமெய்யர், மண்டைத்தேரர்,
குண்டர் குணமிலிகள்
பேசும்பேச்சை மெய்என்று எண்ணி,
அந்நெறி செல்லன்மின்,
மூசுவண்டார் கொன்றைசூடி,
மும்மதிலும் உடனே
நாசம் செய்த நம்பெருமான்
மேயது நள்ளாறே. 10

தண்புனலும் வெண்பிறையும்
தாங்கிய தாழ்சடையன்,
நண்புநல்லார் மல்குகாழி
ஞானசம்பந்தன், நல்ல
பண்புநள்ளாறு ஏத்துபாடல்
பத்தும் இவைவல்லார்
உண்பு நீங்கி, வானவரோடு
உலகில் உறைவாரே. 11

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரசர் தேவாரம்

திருச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே. 1

அரும்பற் றப்பட ஆய்மலர் கொண்டுநீர்
சுரும்பற் றப்படத் தூவித் தொழுமினோ
கரும்பற் றச்சிலைக் காமனைக் காய்ந்தவன்
பெரும்பற் றப்புலி யூரெம் பிரானையே. 2

அரிச்சுற் றவினை யால்அடர்ப் புண்டுநீர்
எரிச்சுற் றக்கிடந் தாரென் றயலவர்
சிரிச்சுற் றுப்பல பேசப்ப டாமுனம்
திருச்சிற் றம்பலஞ் சென்றடைந் துய்ம்மினே. 3

அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லை யில்லதோர் அடிமைபூண் டேனுக்கே.4

ஊனி லாவி உயிர்க்கும் பொழுதெலாம்
நானி லாவி யிருப்பனென் னாதனைத்
தேனி லாவிய சிற்றம் பலவனார்
வானி லாவி யிருக்கவும் வைப்பரே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிட்டர் வானவர் சென்று வரங்கொளுஞ்
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலத்துறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லுமச்
சிட்டர் பாலணு கான்செறு காலனே. 6

ஒருத்த னார்உல கங்கட் கொருசுடர்
திருத்த னார்தில்லைச் சிற்றம் பலவனார்
விருத்த னார்இளை யார்விட முண்டவெம்
அருத்த னார்அடி யாரை அறிவரே. 7

விண்ணி றைந்ததோர் வெவ்வழ லின்னுரு
எண்ணி றைந்த இருவர்க் கறிவொணாக்
கண்ணி றைந்த கடிபொழில் அம்பலத்
துண்ணி றைந்துநின் றாடும் ஒருவனே. 8

வில்லைவட் டப்பட வாங்கி அவுணர்தம்
வல்லைவட் டம்மதின் மூன்றுடன் மாய்த்தவன்
தில்லைவட் டந்திசை கைதொழு வார்வினை
ஒல்லைவட் டங்கடந் தோடுதல் உண்மையே. 9

நாடி நாரணன் நான்முக னென்றிவர்
தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத்
தாடி பாதமென் னெஞ்சுள் இருக்கவே. 10

மதுர வாய்மொழி மங்கையோர் பங்கினன்
சதுரன் சிற்றம் பலவன் திருமலை
அதிர ஆர்த்தெடுத் தான்முடி பத்திற
மிதிகொள் சேவடி சென்றடைந் துய்ம்மினே. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றாயின வாறுவி லக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 12

நெஞ்சம்முமக் கேயிட மாகவைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம்மிது வொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
அஞ்சேலுமென் னீர்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 13

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தேயுமக் காட்செய்து வாழலுற்றாற்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர்
பெற்றமேற்றுகந் தீர்சுற்றும் வெண்டலைகொண்
டணிந்தீரடி கேள்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 14

முன்னம்மடி யேன்அறி யாமையினால்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னையடி யேனுமக் காளும்பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னையடைந் தார்வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தங்கட னாவதுதான்
அன்னநடை யார்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 15

காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையாற்
கரைநின்றவர் கண்டுகொ ளென்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்
வார்த்தையிது வொப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புன லார்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 16

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலர்ந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள் ளுறுசூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 17

உயர்ந்தேன்மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர்தலை காவலி லாமையினால்
வயந்தேயுமக் காட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தேயென் வயிற்றின கம்படியே
பறித்துப்புரட் டியறுத் தீர்த்திடநான்
அயர்ந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னாத்துறை அம்மானே. 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலித்தேன்மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம்மன மொன்று மிலாமையினாற்
சலித்தாலொரு வர்துணை யாருமில்லைச்
சங்கவெண்குழைக் காதுடை எம்பெருமான்
கலித்தேயென் வயிற்றி னகம்படியே
கலக்கி மலக்கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தேனடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 19

பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன்சடை யீர்மெலி யும்பிறையீர்
துன்பேகவ லைபிணி யென்றிவற்றை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
என்போலிக ளும்மை இனித்தெளியார்
அடியார்படு வதிது வேயாகில்
அன்பேஅமை யும்மதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 20

போர்த்தாயங்கோ ரானையின் ஈருரிதோல்
புறங்காடரங் காநட மாடவல்லாய்
ஆர்த்தானரக் கன்றனை மால்வரைக்கீழ்
அடர்த்திட்டருள் செய்த வதுகருதாய்
வேர்த்தும்புரண் டும்விழுந் தும்மெழுந்தால்
என்வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார்புனல் சூழ்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 21

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரர் தேவாரம்

பித்தாபிறை சூடீபெரு மானேஅரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
அத்தாஉனக் காளாயினி அல்லேனென லாமே. 1

நாயேன்பல நாளும்நினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
ஆயாஉனக் காளாயினி அல்லேனென லாமே. 2

மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
அன்னேஉனக் காளாயினி அல்லேனென லாமே. 3

முடியேன்இனிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்றம் ஊர்தீ
கொடியேன்பல பொய்யேஉரைப் பேனைக்குறிக் கொள்நீ
செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
அடிகேளுனக் காளாயினி அல்லேனென லாமே. 4

பாதம்பணி வார்கள்பெறும் பண்டமது பணியாய்
ஆதன்பொரு ளானேன்அறி வில்லேன்அரு ளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
ஆதீஉனக் காளாயினி அல்லேனென லாமே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணார்மதி சூடீதழல் போலுந்திரு மேனீ
எண்ணார்புரம் மூன்றும்எரி யுண்ணநகை செய்தாய்
மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
அண்ணாஉனக் காளாயினி அல்லேன்என லாமே.
6

ஊனாய்உயிர் ஆனாய்உடல் ஆனாய்உல கானாய்
வானாய்நிலன் ஆனாய்கடல் ஆனாய்மலை ஆனாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
ஆனாயுனக் காளாயினி அல்லேன்என லாமே.
7

ஏற்றார்புரம் மூன்றும்எரி உண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வானீர்
ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
ஆற்றாயுனக் காளாயினி அல்லேன்என லாமே.
8

மழுவாள்வலன் ஏந்தீமறை ஓதீமங்கை பங்கா
தொழுவார்அவர் துயர்ஆயின தீர்த்தல்உன தொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
அழகாஉனக் காளாயினி அல்லேன்என லாமே.
9

காரூர்புனல் எய்திக்கரை கல்லித்திரைக் கையாற்
பாரூர்புகழ் எய்தித்திகழ் பன்மாமணி உந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
ஆரூரனெம் பெருமாற்காள் அல்லேன்என லாமே.
10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீரிழிவு நிலமை பற்றிய தெளிவு

**நீரிழிவு என்றால் என்ன?**
ஒவ்வொரு மனிதனின் குருதியிலும் குறிப்பிட்ட அளவு குளுக்கோஸ் உள்ளது. குளுக்கோஸின் அளவு வழமைக்கு மாறாக உயர்வடைகின்ற நிலைமையே நீரிழிவு எனக் கூறப்படும். சாதாரண அளவு FBS = 60-110mg/dl (10 மணித்தியாலங்கள் உணவு உட்கொள்ளாமல் இருந்த பின்னர் பரீட்சிக்கப்பட்ட குருதியின் குளுக்கோஸின் அளவு) PPBS=80-140mg/dl (உணவு உட்கொண்டு 2 மணித்தியாலத்துக்கு பின்னர் பரீட்சிக்கப்பட்ட குருதியின் குளுக்கோஸின் அளவு)

<u>அறிமுகம்</u>

**குருதிக்கு எவ்வாறு குளுக்கோஸ் கிடைக்கின்றது?**
நாம் உட்கொள்ளும் உணவு சமிபாடடைந்த பின்னர் குளுக்கோஸ் என்னும் பதார்த்தமாக மாறி எமது குருதியுடன் சேருகின்றது.

**குளுக்கோஸ் எமக்கு ஏன் தேவைப்படுகின்றது?**
எமக்கு தேவையான சக்தி குளுக்கோஸ் மூலமே கிடைக்கின்றது. குருதியிலுள்ள குளுக்கோஸ் எமது உடலிலுள்ள அனைத்துச் செல்களையும் சென்றடைகின்றது.

**குருதியிலுள்ள குளுக்கோஸ் மட்டும் அதிகரிப்பது ஏன்?**
இந்த குளுக்கோஸானது குருதியின் ஊடாக செல்களுக்குள் நுழைவதற்கு இன்சுலின் தேவைப்படுகின்றது. நுண்செல்களில் காணப்படுகின்ற நுழைவாயில்கள் ஊடாகவே குளுக்கோஸ் அதனுடன் சென்றடைகின்றது. ஆகவே அந்த நுழைவாயில்களை திறப்பதற்கான திறவுகோலாக இன்சுலின் தொழிற்படுகின்றது. அந்த செயல்பாட்டிற்கு தேவையான இன்சுலின் இல்லாவிடில் செல்களுக்குள் குளுக்கோஸ் சென்றடைய மாட்டாது என்பதுடன் குருதியில் குளுக்கோஸ் மட்டம் உயர்வடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீரிழிவு நோயின் அறிகுறிகள் எவை?**
குருதியில் குளுக்கோஸின் மட்டம் உயர்வடைகின்றமையினால் வெளியேறும் சிறுநீரின் அளவு அதிகரிக்கும் பகல் இரவு இரண்டு வேளையிலும் அதிக தாகம் ஏற்படும்

செல்களுக்கு குளுக்கோஸ் கிடைக்காமையினால்
சோர்வு - உடல்வலுவின்மை, அடிக்கடி பசி ஏற்படுதல்,
நித்திரை - உடல் மெலிவடைதல் ஆகிய அறிகுறிகள் ஏற்படும்.

நோய் அறிகுறிகள் இல்லாவிட்டாலும் நீரிழிவு ஏற்படக்கூடிய சாத்தியம் உள்ளது. குடும்பத்தில் நீரிழிவு நோய் நோயாளர்கள் இருப்பின் குருதியின் குளுக்கோஸின் அளவை பரிசோதிப்பது சிறந்ததாகும்.

**நீரிழிவு நோயின் வகைகள் உள்ளனவா?**
ஆம்.
மூன்று (03) வகைகள் உள்ளன.
01. முதலாவது வகை(Type-01) இன்சுலின் சுரக்கும் தன்மையில் குறைவு அல்லது சுரக்காத நிலை காணப்படும். பெரும்பாலும் சிறுவர்களுக்கு அல்லது இளையோருக்கு இந்நிலை காணப்படும். இதற்காக வெளியிலிருந்து இன்சுலினை புகுத்தவேண்டியுள்ளது.

02. இரண்டாவது வகை (Type-02)
இன்சுலின் காணப்பட்ட போதிலும் செல்கள் அவற்றை பயன்படுத்தாத தன்மை. உணவுக்கட்டுப்பாடு அல்லது மருத்துவர் மூலம் சிகிச்சை பெறமுடியும் என்பதுடன் சிலசந்தர்ப்பங்களில் வெளிப்புறமாக இன்சுலினை புகுத்தவேண்டியுள்ளது.

03. கர்ப்பகாலத்தில் ஏற்படும் நீரிழிவு(Gestational Diabetes)
கர்ப்பகாலத்தில் குருதியிலுள்ள குளுக்கோஸ் மட்டம் அதிகரிக்க கூடும். பிரசவத்திற்கு பின்னரும் இது நீடிக்குமானால் எதிர்காலத்தில் ஏற்படுத்துவதற்கு அதுகாரணமாக அமையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குருதியில் குளுக்கோஸின் மட்டத்தை கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் என்ன?**

குளுக்கோஸின் அளவு குருதியில் அதிகரிப்பதனால் ஹோர்மோன் களுக்கு பாதிப்பு ஏற்படலாம். இந்த இடைநிலை பாதிப்பானது குறுங்கால அல்லது நீண்டகால பாதிப்பாக இருக்கலாம்.

**குறுங்கால பாதிப்புகள் எவை?**

ஞாபகமாற்றங்கள், உலர்தன்மை உட்பட பல்வேறு பாதிப்புகளுக்கு இலக்காகக் கூடிய ஆபத்து உள்ளது.

**குறைகுளுக்கோஸ் மட்டம் காணப்படுவதனால் ஏற்படும் நீண்டகால தாக்கங்கள் எவை?**

இருதயம் - நெஞ்சுவலி, பாதங்களுக்கு வலுவற்ற குருதிப்பாய்ச்சல்
நரம்புக் கட்டமைப்பு- கால்கள் மரத்துப் போதல் காயங்கள் ஏற்பட்டால் அது குறித்து கவனக் குறைவாக இருப்பின் கடைசியில் கால்களை வெட்டி நீக்கவேண்டிய நிலை ஏற்படும்.
கண் - வெண்படலம் தோன்றுதல், பார்வையிழத்தல்
சிறுநீர் - சிறுநீர்க்கடுப்பு, சிறுநீரகம் செயலிழத்தல்.

**இந்த பாதிப்புகள் ஏற்படுவதை தடுப்பது எவ்வாறு?**

குருதியில் சிறந்த குளுக்கோஸ் மட்டத்தைப் பேணுதல்.
உயர் குருதி அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருப்பின், குருதி அழுத்தத்தினை சிறந்த மட்டத்தில் பேணுதல்.
குருதியிலுள்ள கொலஸ்ரோல் மட்டத்தினை பேணுதல்.
புகைத்தலை தவிர்த்தல்.
முறையான உடற்பயிற்சி மற்றும் நடைமுறை ரீதியான வாழ்க்கையை முன்னெடுத்தல்.
உணவுகட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சியுடன் உயரத்திற்கு ஏற்ற உடல் எடையை பேணுதல்.
முறையான சிகிச்சைகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் வருடாந்தம் குறைபாடுகள் தொடர்பில் உடற் பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலம் நீரிழிவை கட்டுப்படுத்தமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரிழிவு எப்போதும் ஒரே நிலைமையில் காணப்படுவதில்லை. காலப்போக்கில் அது உக்கிரமடையும். அதனால் சிறந்த வாழ்க்கை முறையை முன்னெடுத்தல் அவசியமாகும் எனவே,

01) சிறந்த உணவு பழக்கத்தை கடைப்பிடித்தல்
02) உடற்பயிற்சி
03) சிறந்த மனநிலையைப் பேணுதல் அவசியமாகும்.

**குருதியில் குளுக்கோஸின் அளவு சரியாக பேணப் படாமைக்கான காரணங்கள்**

01. உணவு கட்டுப்பாட்டை கடைப்பிடிக்காமை
02. முறையான மருந்துகளை உட்கொள்ளாமை (வில்லை அல்லது இன்சுலின்)
03. தொடர்ச்சியாக உடற்பயிற்சியில் ஈடுபடாமை
04. அதிகமான அழுத்தத்திற்கு இலக்காகின்றமை.
05. நோய் அல்லது பாதிப்புகளுக்கு இலக்காகின்ற சந்தர்ப்பங் களில் குருதியிலுள்ள குளுக்கோஸ் மட்டம் குறித்து கவனம் செலுத்தாமை.

**குருதி குளுக்கோஸ் குறைபாடு எனும் "ஹைப்போக்கிளை சீமியா" (hypoglycaemia)**

01. குருதிகுளுக்கோஸ் குறைபாடு எனும் "ஹைப்போக்கிளை சீமியக்" என்றால் என்ன?

    குருதியில் குளுக்கோஸ் மட்டும் துரிதமாக வீழ்ச்சியுறுவதை குறிப்பதாகும்.

02. குருதியில் குளுக்கோஸ் குறைபாடு ஏற்படுவதற்கான நோய் அறிகுறிகள்
    - அதிக பசி ஏற்படுதல்
    - நடுக்கம்
    - உடலில் குளிர்த்தன்மையை உணர்தல்
    - நாடித்துடிப்பு அதிகமாகுதல்
    - தலைவலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திடுக்கிடுதல்
- சோர்வு அல்லது ஒருவித மயக்க நிலைமை
- சுயநினைவை இழத்தல்

03.குருதிகுளுக்கோஸ் குறைபாடு ஏற்படுவதற்கான காரணங்கள்?

1. இன்சுலின் அல்லது நீரிழிவுக்கான மாத்திரைகளை உரிய அளவைவிட கூடுதலாக உட்கொள்ளல்
2. பிரதான உணவு வேளைகளைத் தவிர்த்தல் அல்லது உணவு வேளைகளுக்கு இடையே முறையான நேரவித்தியாசத்தை பேணாமை.
3. உரிய அளவிற்கு உணவு உட்கொள்ளாமை
4. இன்சுலின் பெற்றுக் கொண்ட பின்னர் உணவு உட்கொள்ளா மல் இருத்தல் அல்லது உணவு உட்கொள்வதில் தாமதம்.
5. உணவை உட்கொள்ளாமல் வில்லைகள் அல்லது இன்சுலின் உட்கொள்ளல்.
6. நோய்வாய்ப்படுதல், உணவை உட்கொள்ளாத நிலைமைக்கு தள்ளப்படுதல்
   உதாரணம் - காய்ச்சல்

**குருதிக் குளுக்கோஸ் குறைபாடு (hypoglycemia) ஏற்படுவதை தடுப்பது எவ்வாறு?**

- பட்டினியுடன் நீண்டநேரம் இருக்கக்கூடாது
- நீரிழிவுக்கு உகந்த உணவுகளை உரிய அளவில் உட்கொள்ளல்.
- பிரதான உணவு வேளைகளை எவ்விதத்திலும் தவிர்க்கக் கூடாது.
- பட்டினியுடன் உடற்பயிற்சியில் ஈடுபடவேண்டாம்.
- இன்சுலின் அல்லது நீரிழிவுக்கான வில்லைகளை மருத்துவரின் ஆலோசனைக்கு அமைய உரிய அளவுகளில் மட்டும் உட்கொள்ளல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஏதேனும் காரணத்தினால் நீரிழிவு நோய்க்கான இன்சுலின் ஊசி ஏற்றுதல் அல்லது வில்லைகளை உரிய வேளைக்கு உட்கொள்ள மறந்துவிடும் சந்தர்ப்பத்தில் மீண்டும் கூடுதலாக உட்கொள்ளகூடாது. நீங்கள் அடுத்த வேளைக்கான மாத்திரை அளவை மட்டும் உரிய நேரத்திற்கு உட்கொள்ளுதல்.
- பிரதான உணவு வேளைகளுக்கு இடையில் சிற்றுண்டி ஏதேனு மொன்றை (snack) உட்கொள்ள முடியும். உதாரணமாக- ஏதேனும் பழவகை அல்லது போஷாக்குள்ள பானம்.

**குருதியில் குளுக்கோஸ் குறைபாடு ஏற்படுமாயின் செய்ய வேண்டியது எவை?**

குருதியில் குளுக்கோஸ் குறைபாடுகள் ஏற்படுவதனால் குருதியிலுள்ள சர்க்கரையின் மட்டம் குறையும்.

எனினும் சாதாரண பசி உணரப்பட்டஉடனேயே சர்க்கரையுடன் கூடிய உணவு உட்கொள்வதை தவிர்க்கவும்.

அதிக பசி எடுக்கும் போது குருதியில் குளுக்கோஸ் குறைபாடு ஏற்படுவதற்கான ஏதேனும் அறிகுறி காணப்படுமாயின் அல்லது நீங்கள் மயக்க நிலையை உணர்வீர்களாயின் உடனடியாக சிறிது குளுக்கோஸ் அல்லது சர்க்கரை கலந்தபானம் அல்லது சிறிய சக்கரையை உட்கொள்ளவும்.

**குறிப்பு** : குருதிக் குளுக்கோஸ் அதிகரித்தல் (hyperglycaemia) ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களிலும் சோர்வு என்பன ஏற்படக்கூடும் என்பதனால் நோயாளருக்கு சர்க்கரை அடங்கிய எவற்றையேனும் வழங்க முன்னர் குருதிகுளுக்கோஸ் மட்டத்தை உறுதி செய்து கொள்வது சிறந்தது.

**குருதிக் குளுக்கோஸ் குறைபாடு ஏற்பட்டு மூச்சடைத்தால் செய்ய வேண்டியது என்ன?**

நோயாளரை உடனடியாக அங்கீகரிக்கப்பட்ட வைத்தியர் அல்லது வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லவேண்டும். (வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லும் போது குளுக்கோஸ் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய சக்கரையை நீரில் கலந்து நோயாளரின் வாய்க்குள் நன்றாக தடவிவிடலாம்.)
உங்களுடன் இருப்பவர்களுக்கு அது குறித்து தெளிவுபடுத்தி வையுங்கள்.

எவ்வாறாயினும் குருதிக் குளுக்கோஸ் குறைபாடு உள்ளவர்களுக்கு சிகிச்சையளிப்பதைவிட அக்குறைபாடு ஏற்படுவதைத் தடுப்பதே முக்கியமானதாக அமைகின்றது. எனவே நீங்கள் நீரிழிவை கட்டுப்படுத்துவது தொடர்பில் நன்றாக அறிந்திருப்பது அத்தியாவசியமாகும்.

**நீரிழிவு நோயாளர்களுக்கு உணவு தொடர்பில் ஆலோசனைகள்**

**பின்வரும் உணவு வகைகள் கூடுமானவரை தவிர்க்கவும்**
அனைத்து வகையான இனிப்பு உணவுகள், சர்க்கரை, கருப்பட்டி, தேன், பாணி, சிரப் வகைகள், பேரிச்சம்பழம், டொபி, கேக், இனிப்பு பண்டங்கள், எள்ளுருண்டை, மஸ்கட், புடிங் வகைகள், வட்டிலாப்பம், சொக்லேட், பழப்பாகுவகைகள், மாஸ்மெலோஸ், குளிர்பானங்கள், இனிப்பு சேர்க்கப்பட்ட பழச்சாறுகள், இனிப்பு பிஸ்கட்கள், ஐஸ்கிறீம், ரின்பால், மோல்ட் பால்மா.

**பின்வரும் உணவு வகைகளை வெகுவாக உட்கொள்ள முடியும்.**
அனைத்து கீரை வகைகள் : பொன்னாங்காணி, வல்லாரை, அவரை, பசளி, கங்குன், அகத்தி.

**மாப்பொருள் குறைந்த மரக்கறி வகைகள்:**
போஞ்சி, பயற்றங்காய், சிறகவரை, கத்தரி, வெண்டிக்காய், தக்காளி, கோவா, லீக்ஸ், முள்ளங்கி, நோக்கோள், பாகற்காய், வெள்ளரி, வட்டக்காய், முருங்கை, சிகப்பு வெங்காயம், பயறு, கௌப்பி, சோயா, அவரை மற்றும் தானிய வகைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்வரும் உணவு வகைகளை நடுத்தர அளவில் உட்கொள்ள முடியும்**

- ✱ தானியவகை : தவிடு நீக்கப்படாத அரிசி, அரிசிமா, இடியப்பம் மற்றும் பிட்டு என்பன. ஆட்டாமாவினால் தயாரிக்கப்பட்ட உணவுகள், ரொட்டி, இடியப்பம், குரக்கன் பிட்டு போன்றவை.
- ✱ கிழங்குவகை: உருளைக்கிழங்கு, வற்றாளை, மரவள்ளி, சேனைக்கிழங்கு, இராசவள்ளிக் கிழங்கு.
- ✱ மாப்பொருள் அடங்கிய மரக்கறி மற்றும் பழவகை : வாழைக்காய், பலாக்காய், பலாவிதை, ஈரப்பலா,
- ✱ இறைச்சி உணவுகள்: கோழியிறைச்சி, முட்டை வெள்ளைகரு, மீன்.
- ✱ இனிப்புச் சுவை கலக்காத பழரசம்: தோடை, கொடித் தோடை, தேசிக்காய்
- ✱ பழங்கள்: பப்பாளி, வாழைப்பழம், தர்பூசணி, (அரைப்பழம்) மிகவும் உகந்தவை.

## வழக்குக் குறிப்புக்கள்

1. குதிக்காலில் ஏற்படும் வலிக்கு செங்கல்லைப் பழுக்கக் காய்ச்சி அதன் மீது பழுத்த அமுக்கும் அலைகளை அடுக்கி காலை அதன் மீது தாங்கக்கூடிய சூட்டில் அழுத்திவர வலிகுறையும்.
2. உள்ளியை உண்டுவர இரத்தத்தில் உள்ள Cholesterol கட்டுப்படுத்தும்.
3. ஆடாதோடை இலையை குடிநீர் செய்து அதில் தேன் சேர்த்துக் கொடுக்க சுரம், இருமல் முதலியன குறையும் இலையை உலர்த்தி சுருட்டாக சுருட்டி புகைப்பிடிக்க இரைப்பு நோய் (ஆஸ்துமா) தீரும்.
4. நொச்சி இலையை வதக்கி ஒற்றடமிட வீக்கம், கீல்வாயு (மூட்டுவாதம்) முதலியன தீரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அறுகம்புல்லை இடித்து பிழிந்த சாற்றைக் கண்ணுக்குப் பிழிய கண்ணோயும் கண்புகைச்சலும் மூக்கிலிட மூக்கிலிருந்துபாயும் குருதியும், காயம்பட்ட இடத்தில் பூச அதிலிருந்து வடியும் குருதியும் நிற்கும்.
6. 5g இஞ்சி எடுத்து புறத்தோல் சீவி துப்பரவுசெய்து பசுப்பால் சிறிது விட்டரைத்து 20ml பசுப்பாலில் கலந்து காலை, மாலை இரு வேளை சாப்பிட்டுவர வயிற்றிலுள்ள வாய்வு நீங்கும் வயிற்று மந்தம் நீங்கி பசியுண்டாகும்
7. ஓமம் 30g, மிளகு 30g இவை இரண்டையும் வெதுப்பி (வறுத்து) 30g வெல்லத்துடன் சேர்த்து அரைத்து கொட்டைப் பாக்களவு 10 நாட்களுக்கு உண்டுவர வயிற்று பொருமல் நீங்கும்.
8. மஞ்சளைச் சுட்டுக் கருக்கி அந்த சாம்பலை வேண்டியளவு தேன் கலந்து உண்ண காமாலை, ஒவ்வாமை நீங்கும் மஞ்சளை சுட்டு முக நீரேற்றம் (sinusititis) நீங்கும்.
9. வாழைக்கிழங்குசாறு, தண்டுச்சாறு 30-60ml தினம் ஒருவேளை குடித்துவர சிறுநீர் கற்கள் கரைந்து வெளியேறும்.
10. வேம்பின் பாகங்கள் அனைத்துக்கும் புழுக்கொல்லிச் செய்கை உண்டு. இதன் இளம் தளிரை அரைத்து பனைவெல்லத்துடன் சேர்த்து குழந்தைகளுக்கு கொடுக்க வயிற்றுப்புழு நீங்கும்
11. குழந்தைகளுக்கு மலக்கட்டு ஏற்பட்டால் மலவாசலில் சிற்றாமணக்கு எண்ணெயைத்தடவி விட மலம் வெளிறேும் பெரியவர்கட்கு 30ml சிற்றாமணக்கு எண்ணையைக் குடிக்க கொடுக்க மலம் இளகி இலகுவில் வெளியேறும்.
12. மஞ்சிட்டி வேரைத் தேன் விட்டரைத்து முகத்தின் அழகைக் கெடுக்கின்ற முகப்பரு முதலியவைகளுக்கு பூச அவை குணமாகும்.
13. ஆவாரம் பூவை (நிழலில் உலர்திய) அவரை இலை, பூ, பட்டை, வேர், வித்து) கஷாயமிட்டு குடித்துவர மேக நீர் (நீரிழிவு) குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் பசுபதி துரைரட்ணம் அவர்களுக்கு அஞ்சலி பதாகைகள் வெளியிட்டோர்..










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுடன் நினைக்கிறோம்

**அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய் விளங்கி எம் அனைவரினதும் உள்ளங்களிலும் உயர்வான இடம்பெற்று விளங்கிய எங்கள் குலவிளக்கு அமரர் - பசுபதி துரைரத்தினம் அவர்கள் எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட போது நாம் ஆறுதல் தேடி நின்றவேளை மறைவுச் செய்தியறிந்து**

- அடுத்த நொடியே ஓடிவந்து நேரடியாக ஆறுதல் அளித்த உள்ளங்களிற்கும்.
- தொலைவிலிருந்தாலும் தொலைபேசி மூலமும் ஏனைய சமூக ஊடகங்கள் மூலம் ஆறுதல் தந்த உள்ளங்களிற்கும்.
- அஞ்சலிப்பதாதைகள் அஞ்சலிப் பிரசுரங்கள் மற்றும் மலர் வளயங்கள், பூக்கள், பூமாலைகள் கொண்டு அஞ்சலித்து நின்றோருக்கும்.
- மற்றும் பல வழிகளில் உதவிகளை புரிந்த அரச திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் ஊரக சமூக அமைப்புக்கள் நட்பு உள்ளங்களிற்கும்.
- எம் தந்தை உடல் இல்லத்திலிருந்த போது ஆன்மிக பதிகங்களை பாடி தீபாராதனை செய்து பூதவுடலைத் திருவுடலாக்கி நின்ற உள்ளங்களிற்கும்.
- இரங்கலுரைகளை நிகழ்த்தி சிறப்பித்தோருக்கும்
- இறுதிக் கிரியைகள், சபிண்டீகரணக்கிரியைகள், வீட்டுக் கிரியைகளை நிகழ்த்திய அந்தணர்களிற்கும் முன்னின்று உதவிபுரிந்த நல்லுள்ளங்களிற்கும்.
- எம் தந்தை தேக சுகம்பெற தொடராக உதவிவந்த வைத்திய சமூகத்திற்கும் தாதிய சமூகத்திற்கும் குறிப்பாக வீடுவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து உதவிநின்ற Physio therapist, Speech therapist ஆகியோருக்கும்.

- நாம் செய்வதறியாது துயருற்று நின்ற போது தேவையறிந்து செயற்பட்ட அயலவர், உற்றார் உறவினர், நண்பர்களுக்கும், நாம் பசியோடு இருந்துவிடக் கூடாதென்பதற்காக நேரமறிந்து உணவு, தேநீர், உபசரிப்புக்களை வழங்கிய உள்ளங்களிற்கும்
- இறுதி வரை எம் தந்தை திருவுடலை சுமந்து அவரை பின் தொடர்ந்தும் சென்று அஞ்சலித்து வழியனுப்பியவர்களுக்கும்
- மற்றும் பந்தல் சேவை ஒளி, ஒலி, வாகன உதவிகள் புரிந்தோருக்கும்
- இறுதிப்பயணம் சிறக்க குறித்த நேரத்தில் எம் தந்தை உடலை அலங்கரித்துத் தந்த பப்பாச்சி மலர்ச்சாலை யினருக்கும்
- மேளஇசை, பாண்ட் இசை வாத்தியங்கள் மூலம் இசையளித் தோருக்கும்
- அந்தியோட்டி சபிண்டிகரண கிரியைகள், 31ம் நாள் ஆத்மா சாந்தி கிரியைகளில் பங்குகொண்டு உதவி செய்த மற்றும் அஞ்சலித்த உள்ளங்களிற்கும்
- நினைவு மலருக்கு இரங்கல் வழங்கியோருக்கும்
- நினைவு மலரை மிகக்குறுகிய காலத்துள் அச்சிட்டு வழங்கிய பொய்கை பதிப்பகத்திற்கும்
- மேலும் நன்றிக்குரியோரை குறிப்பிடத்தவறின் அவ்வுள்ளங்க ளிற்கும்

**எமது மனம் நிறைந்த நன்றிகளை**
**சமர்ப்பிக்கின்றோம் எங்கள் இதயத்தால்**

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிற்(ப்)பி

கல்லிலே கலைவண்ணம்
தந்தனன் சிற்பி-எம்மவன்
மண்ணையே பொன்னாய்
ஆக்கினன் கண்டூர்
சக்திக்காய் தேரினை வடித்து
தந்தனன் சிற்பி-எம்மவன்
அதனை இழுக்கும் சக்தியை
தந்தனன் கண்டூர்
நீரினை ஏந்தியே முத்தாய்
தந்தது சிப்பி-எம்மவன் நீரை
(நெல்) மணியாய் தந்தனன்
கண்டூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org